# பெண்களின் உடல்கள் மீது தொடுக்கப்படும் போர்:

## இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் பால்நிலை அம்சங்கள்



#MINORMATTERS

**#MINORMATTERS**

*MinorMatters* என்பது மத நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தேசிய பிரச்சாரமாகும். நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கும், மத தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கும் மற்றும் தேசிய சகவாழ்வை மேம்படுத்துவதற்குமான முயற்சிகளை ஆதரிக்கவும், வலுப்படுத்தவும் நாங்கள் முயல்கிறோம்.

இந்த அறிக்கையைப் பொறுத்தமட்டில் *MinorMatters* மட்டுமே விநியோக உரிமைகளைக் கொண்டுள்ளது.

# பெண்களின் உடல்கள் மீது தொடுக்கப்படும் போர்: இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் பால்நிலை அம்சங்கள்

ஷ்ரீன் சரூர்

# முன்னுரை

புத்தளம் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் (*MWDT*) பணியாளர்கள் மற்றும் சக செயற்பாட்டாளர்கள் சிலரின் உதவி மற்றும் குறிப்பாக நாட்டில் அதிகரித்துவரும் மத தீவிரவாத சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவது தொடர்பில் ஏற்கனவே உள்ள பணிகள் இல்லாமல் இந்த ஆராய்ச்சி சாத்தியமில்லை. *MWDT* பணியாளர்களும் அவர்களுடைய பங்காளர்களும் இங்கு குறிப்பிடப்படும் சம்பவங்கள் பலவற்றை குறிப்பாக புத்தளத்தில் இடம்பெற்ற சம்பவங்களைக் கையாண்டிருப்பதால் பாதிக்கப்பட்டவர்களை எளிதில் அடையாளம் காண முடிந்தது. எனினும் இந்த ஆராய்ச்சி முடிவுகள் *FORB* இன் பால்நிலை அம்சம் தொடர்பில் ஒரு சிறுபகுதி மட்டுமே என்பதுடன் வரையறுக்கப்பட்ட பகுதிகள் மற்றும் சில பரந்த சிக்கல்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. எங்களுடைய உரையாடல்களில் அரச உத்தியோகத்தர்கள், குறிப்பாக நிர்வாக மற்றும் சுகாதார அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள் அக்கறையுடன் பங்களித்தனர். *MinorMatters* இன் நிதியுதவி இல்லாவிட்டால் இந்த ஆராய்ச்சி சாத்தியமில்லை. *MinorMatters* இன் சட்டம் மற்றும் ஆராய்ச்சி அலுவலரான சலோமி டி சில்வாவிற்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புத்தளம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களையும் செயற்பாட்டாளர்களையும் நேர்காணல் செய்வது, அவர்களின் கதைகளைப் பதிவு செய்வது என இந்த ஆராய்ச்சியில் ∴பாத்திமா நிவ்லா நசீர் பாரிய பங்களித்துள்ளார். அத்துடன் கலாநிதி ∴பாரா மிஹ்லர், அமீர் பாயிஸ் மற்றும் முகதாசா வாஹீட் ஆகியோரின் கருத்துகள் பெரிதும் பாராட்டப்படுகின்றன. ஆசிரிய உதவி மற்றும் ஊக்கமளித்த எனது நெருங்கிய தோழி மைதிலி பாலாவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, சாட்சியமளித்த, தங்கள் சோகக் கதைகளை பகிர்ந்துகொள்ள முன்வந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அவர்கள் இல்லாமல் இந்த ஆராய்ச்சியும் கொள்கைப் பரிந்துரைகளும் சாத்தியமில்லை.

**ஷிரீன் அப்துல் சரூர்,**
ஆசிரியர்
ஜுலை 20, 2023

# உள்ளடக்கம்

page 01 சூழல்: வளர்ந்து வரும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகள்

page 03 *FoRB* மீறல்கள், பாலினம் மற்றும் பொதுத்தன்மை

page 07 இலங்கையின் முஸ்லிம் பெண்கள் மீது ஈஸ்டர் குண்டுவெடிப்பின் தாக்கம்

page 28 முடிவு மற்றும் பரிந்துரைகள்

# சூழல்: வளர்ந்து வரும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகள்

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான ஏற்கனவேயுள்ள வெறுப்பை மேலும் அதிகரிக்க உதவுவதற்கு இஸ்லாமா/போபியா என்பது வசதியான ஒன்றாக இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்ததை அடுத்து சிங்கள தேசியவாதிகளின் பார்வை வேறொரு ஏனைய சிறுபான்மை சமூகத்தை நோக்கித் திரும்பியுள்ளது. பிராந்தியத்தில் (இந்தியா முதல் தாய்லாந்து மற்றும் மியன்மார் வரை) முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரித்துவரும் வெறுப்பைப் பயன்படுத்தி ஞானசார போன்ற தேரர்கள் வெறுப்பு பேச்சின் மூலம் 2014ல் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களைத் தூண்டினார்கள். ராஜபக்ஸ நிர்வாகம் இதற்கு ஆதரவளித்ததுடன் குற்றவாளிகளைத் தண்டனையிலிருந்து விலக்களித்தது. 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து ராஜபக்ஸவின் சகோதரர் பதவிக்கு வந்ததுடன் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறைகளின் வேகம் மேலும் அதிகரித்தன. இந்த வெறுப்பை ஆதரிப்பவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான தவறான பிரச்சாரங்களை முன்வைத்தனர். குறிப்பாக பெண்களின் ஆடைக் கட்டுப்பாடுகள், சனத்தொகை வளர்ச்சி, பொருளாதாரச் செழுமை மற்றும் கூட்டங்களைக் கூட்டுவதைக் காரணமாகக் காட்டி முஸ்லிம்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை நியாயப்படுத்தினர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு, அவசரகால விதிமுறைகளின் கீழ் பெண்கள் முகத்தை மறைக்கும் வகையிலான ஆடையை அணிய அரசாங்கம் தடை விதித்தது. அத்துடன் முஸ்லிம் பெண்களின் ஆடைக் கட்டுப்பாடு தொடர்பில் இனத்துவேஷமான பிரச்சாரங்களும் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டன. இதன் விளைவாக, இஸ்லாமிய ஆடைகளை அணியத் தேர்ந்தெடுக்கும் முஸ்லிம் பெண்களின் பாதுகாப்பு குறைந்தது. அவசரகால விதிமுறைகள் ரத்துச் செய்யப்பட்டாலும், முஸ்லிம் பெண்கள் அவர்கள் விரும்பும் ஆடையை அணிவது தொடர்பில் தொடர்ந்து துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறார்கள். இதன் விளைவாக பல பெண்கள் முகத்தை மற்றும் தலையை மறைக்கும் ஆடைகளை அகற்ற விரும்பினார்கள். 2019 ஆம் ஆண்டு ஜூலை 29, பொதுநிர்வாக அமைச்சு பெண் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆடைக் கட்டுப்பாடு தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டது. அதில் சேலை மட்டுமே அணிய வேண்டும் எனவும் முஸ்லிம் பெண் உத்தியோகத்தர்கள் அபாயா, நிக்காப் அல்லது தலையை மூடும் துப்பட்டாவுடன் கூடிய சல்வார் கமீஸை அணியத் தடை செய்தது. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து இந்த சுற்றறிக்கை மீளப்பெறப்பட்ட போதும், முஸ்லிம் பெண் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் சிரமங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. சிலர் தங்கள் அரச பணிகளை ராஜினாமா செய்துள்ளனர் (கீழே விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது).

2020, ஜூன் 2 ஆம் திகதி, வர்த்தமானி இல. 2178/17 மூலம் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முகாமைத்துவத்திற்கான செயலணி உருவாக்கப்பட்டது. இவர்கள் பௌத்த மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பதாகக் கூறி அம்பாறையில் காணிகளை

அளப்பதுடன் தங்கள் காணிகளுக்குச் செல்லுபடியாகும் உறுதிகளைக் கொண்டிருக்கும் 300 முஸ்லிம் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சிங்கள ஆண்களை மட்டும் கொண்ட இந்தப் செயலணியில் தொல்பொருள் ஆய்வாளர்கள் மட்டுமன்றி பௌத்த துறவிகள் மற்றும் இராணுவத்தினரும் உள்ளனர். அம்பாறையானது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி ஆகும். முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களின் காணிகளைப் பறிக்கும் முயற்சியின் மூலம் பல இனங்களும் வாழும் மாகாணம் என்ற அடையாளத்தை வேண்டுமென்றே குறைக்க முற்படுவதுடன் இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்திற்கும் முட்டுக்கட்டை போட முற்படுகிறது.[1]

முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான புதிய பாகுபாட்டு வடிவங்களை கோவிட் பெருந்தொற்றும் கொண்டுவந்தது. முஸ்லிம்கள் கோவிட்டைப் பரப்புவர்கள் எனும் வகையில் ஊடகங்களில் கட்டுரைகள் எழுதப்பட்டன. கோவிட் 19 தொற்றால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைக்கு தலைமை தாங்கும் சட்ட வைத்திய அதிகாரி ஒருவர், தொற்றால் இறந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கான தெரிவு அனுமதிக்கப்பட்டால், கோவிட் 19 தொற்றால் இறந்தவர்களின் உடல்களை உயிரியல் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது என கூறினார்.[2] இதைத் தொடர்ந்து முந்நூறுக்கும் மேற்பட்ட கோவிட் மற்றும் கோவிட் தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாசாக்கள் (உடல்கள்) வலுக்கட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டன. உலகளவில் கூக்குரல்கள் எழுப்பப்பட்டாலும்,[3] மார்ச் 2022 வரை வலுக்கட்டாயமாக தகனம் செய்யும் கொள்கை முழுமையாக நீக்கப்படவில்லை.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டம் (*PTA*) முஸ்லிம்களுக்கு எதிராக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. இதை மாற்றுவதற்குப் பதிலாக, தற்போதைய அரசாங்கம் இன்னும் கொடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை (*ATA*) கொண்டுவர முற்படுகிறது. *ISIS* இருப்பதாக சந்தேகிக்கப்படும் பின்னணி மற்றும் தேசியப் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையைப் பாதுகாக்க வேண்டியதன் பின்னணியில் *ATA* உருவாக்கப்படுவதாக முஸ்லிம் சமூகம் கவலை கொண்டுள்ளது. இஸ்லாமா/போபியா அல்லது வெறுப்புணர்வை எதிர்க்க முயற்சிக்கும் எந்தவொரு முஸ்லிம் அல்லது சிறுபான்மை சமூக உறுப்பினரையும் பயங்கரவாதியாக முத்திரை குத்துவதற்கு இந்த முன்மொழியப்பட்ட சட்டம் அனுமதிக்கும் அளவிற்கு அதன் விதிகள் மிகவும் பரந்தவையாக உள்ளன. இது வெறுமனே பயம் அல்ல சீர்திருத்த எண்ணம் கொண்ட சில முஸ்லிம் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் *PTA* மற்றும் *ICCPR* சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை இதற்கான உதாரணமாகும்.

---

1 Input to the Report on Anti-Muslim Hatred and Discrimination by Alliance for Minorities (வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள 8 சிவில் நிறுவனங்களின் கூட்டமைப்பு))

2 The Leader, 'Small fear whether the dead bodies with the virus can be used as biological weapons - Dr. Channa Perera tells BBC' 16th April 2020, https://english.theleader.lk/news/690-small-fear-whether-the-dead-bodies-with-the-virus-can-be-used-as-biological-weapons-dr-channa-perera-tells-bbc

3 OHCHR, 'Sri Lanka: Compulsory cremation of COVID-19 bodies cannot continue, say UN experts', 25th January 2021, https://www.ohchr.org/en/press-releases/2021/01/sri-lanka-compulsory-cremation-covid-19-bodies-cannot-continue-say-un

துரதிஷ்டவசமாக, இழிவுபடுத்துதல் மற்றும் வெறுப்புணர்ச்சி என்பன முஸ்லிம்கள் மத்தியிலும் உள்ளன. வஹ்ஹாபிஸம் அதிகரித்துவரும் நிலையில் அவ்வாறான சிந்தனைக்கு இணங்காதவர்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள், மறுக்கப்படுகிறார்கள் மற்றும் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். சிலர் முஸ்லிம்களால் (குறிப்பாக ஷாபி சிந்தனையை ஊக்குவிப்பவர்கள்) தாக்கப்படுகிறார்கள். அகில இலங்கை ஜமயத்துல் உலமா போன்ற தலைமை தாங்கும் இறையியல் குழுக்களால் தீவிர, பின்தங்கிய அல்லது சகிப்புத்தன்மையற்ற நடைமுறைகள் வளர்க்கப்படுகின்றன. இந்த உலமாக்கள் சமூகத்தில் எந்த முற்போக்கான சீர்திருத்தங்களுக்கும், குறிப்பாக பெண் உறுப்பு சிதைப்பை நிறுத்துதல், மதரஸ ா கல்வி, முஸ்லிம் திருமண விவகாரங்களை நிர்வகிக்கும் பழமையான மற்றும் பாரபட்சமான முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் (*MMDA*) ஆகியவற்றைச் சீர்திருத்துவதற்கு பெரும் முட்டுக்கட்டையாக உள்ளனர். முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் *MMDA*யைச் சீர்திருத்த முஸ்லிம் பெண்கள் குழுக்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகின்றன. ஆனால் அவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் என பெண் வெறுப்பு மதகுருமார்கள் மற்றும் சமூகத் தலைவர்களால் இழிவுபடுத்தப்படுகிறார்கள். இஸ்லாமா/போபியாவால் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒற்றுமைக்கான தேவை அதிகரித்துவரும் நிலையில் அவர்களின் பணி மேலும் கடினமாக உள்ளது.

## FORB மீறல்கள், பாலினம் மற்றும் பொதுத்தன்மை

2009 ஆம் ஆண்டு 26 வருட கால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான பொறுப்புக்கூறலைத் தவிர்க்கும் ஒரு மூலோபாயமாக இலங்கை அரசாங்கம் ஒவ்வொரு சமூகத்திலும் மதத் தீவிரவாதத்தை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தூண்டியுள்ளது. அவ்வாறே அடுத்தடுத்து வரும் அரசாங்கங்கள் குற்றவாளிகளை வழக்குகளில் இருந்து தப்பிக்க வைக்க அவர்களை அதிகாரப் பதவிகளில் வைத்திருக்கின்றன. எல்லாவற்றையும் போல, மதத் தீவிரவாதமும் பால்நிலைக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. வெறுப்பைப் பரப்புவதற்கான ஒரு கருவியாக பெண்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

இந்து பெண்கள் சிவபெருமானிடம் அதிக பக்தி கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்பதுடன் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களையும் பரப்பி வருவதாக கிழக்கு மாகாணத்தில் சிவசேனா அமைப்பின் வளர்ச்சி குறித்து பெண்கள் அமைப்புகள் புகார் தெரிவிக்கின்றன. முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் முஸ்லிம் பெண்கள் பிற மத சமூகங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டு அவர்களின் நடமாட்டம் மற்றும் தொடர்புகள் கட்டுப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவது போன்ற வடிவங்களில் மதவாதம் வளர்ந்து வருவதாக பெண்கள் குழுக்களின் அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்தவ சமூகத்தின் மீதான அதிகரித்த தாக்குதல்கள், பெண் போதகர்களின் மதப் பிரசங்க ஈடுபாடு மற்றும் சமூகப் பணிகளில் அவர்களின் வெளிப்படையான ஈடுபாடு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் வடக்கு மற்றும் கிழக்கில் தொடரும் இராணுவமயமாக்கப்பட்ட காலனித்துவத்தின்

ஒரு பகுதியாக புதிய மற்றும் பலவந்தமாகக் கட்டப்பட்ட பௌத்த தலங்கள் மற்றும் விகாரைகளுக்கு யாத்திரை செல்வதற்காக சிங்களப் பெண்களும் பௌத்த மதத்திற்கு இழுக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

பக்தியானது பொதுவாக பெண்களுக்கான சடங்குகள் மூலமும் தொடர்புகள் மூலமும் வெளிப்படையாக ஊக்குவிக்கப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்ற போர் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னரான சூழ்நிலையில் பெண்களின் உடல்கள், ஆடைகள் மற்றும் இனப்பெருக்கத் திறன் ஆகியவை இந்த வளர்ந்துவரும் மத அடையாள அரசியலுக்கு மையமாக உள்ளன. கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளம் பெண்களைக் கடத்திச் சென்று திருமணம் செய்து கொள்வதாக முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான வதந்திகள் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களுக்கு இடையில் முறுகல் நிலையை அதிகரிக்கின்றன. இது சமூக எல்லைகளைத் தாண்டி காதலிக்கும் அல்லது திருமணம் செய்யும் ஜோடிகளை ஒதுக்கிவைக்கிறது. 2021 ஆம் ஆண்டு டிசம்பர், 6 ஆம் திகதி ஒரே நாடு ஒரு சட்டம் செயலணியின் தலைவர் (ஞானசார தேரர் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதியின் மன்னிப்பைப் பெற்றவர்) மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது, முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இந்துக்களை மதம் மாற்றுவதாக நம்பத்தகுந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.[4]

ஒவ்வொரு பேரிடரிலும் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இலங்கையின் இன மற்றும் மத மோதல்களும் இதற்கு விதிவிலக்கல்ல. போருக்குப் பின்னரான சூழலில் அரசாங்கம் மற்றும் போராளிகளால் காணாமல் போன பல குடும்ப உறுப்பினர்களைத் தேடும் நிலையில் தமிழ் பெண்கள் தள்ளப்பட்டனர். இராணுவமயமாக்கப்பட்ட சூழலில் பெரும்பாலும் தரைமட்டமாக்கப்பட்ட தங்கள் வீடுகளுக்கு திரும்பும்போது, குறைந்தளவான அரசாங்க ஆதரவுடன் தங்கள் சமூகங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு, முஸ்லிம் பெண்கள் தங்கள் மத ஆடைகளை அணிவதற்கும், பொது இடங்களில் பாதுகாப்பாக இருப்பதற்கும், பொதுவெளியில் நடமாடுவதற்கும், கூட்டம் கூடுவதற்கான சுதந்திரத்திற்காக போராட வேண்டியிருந்தது. அவர்கள் கொடூரமான *PTA* சட்டத்தின் இலக்குகளாகவும் ஆனார்கள். அத்துடன் இன்றுவரை அவர்களில் பலர் தங்கள் குடும்ப உறுப்பினர்களை (பெரும்பாலும் ஆண்கள்) அரசாங்கத்தின் தடுப்பு முகாம்கள் மற்றும் கண்காணிப்பில் இருந்து விடுவிக்க முயற்சி செய்துவருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர், குறிப்பாக பெண்கள் மீது திணிக்கப்படும் மதப் பழக்கவழக்கங்களையும் தங்கள் சமூகத்திற்குள் அதிகரித்துள்ள மதப்பற்றையும் மட்டக்களப்பில் உள்ள இந்து பெண்கள் உறுதிப்படுத்துகின்றனர். இந்த நடைமுறைகளுக்கு தர்க்கரீதியான அடிப்படை இல்லை என்றும் *RSS* செல்வாக்கின் விளைவு இது என்றும் அவர்கள் நம்புகிறார்கள். உதாரணமாக,

4 Newswire, ''One Country, One Law' receives warm response from East – PMD (Video)', 6th December 2021, https://www.newswire.lk/2021/12/06/one-country-one-law-receives-warm-response-from-east-pmd-video/

பெண்களுக்கு பல்வேறு வகையான விரதங்கள் அல்லது நோன்பு நோற்பதற்கான தேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தெளிவான நன்மைகள் எதுவுமில்லாமல் குறிப்பிடத்தக்க தியாகங்கள் இதற்குத் தேவைப்படுகின்றன. மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தின் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்கியதன் பின்னர் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகள் வலுத்துவரும் நிலையில், சில ஆண்களும் மத அமைப்புகளும் மதத்தை ஒரு கருவியாகக் கொண்டு முஸ்லிம் மற்றும் இந்து சமூகங்களில் பெண்களின் உடல் மற்றும் மனதை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றன. இதன் மூலம் தங்கள் உடலின் புனிதத்தைப் பாதுகாப்பது மற்றும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது போன்ற காலங்காலமாக பெண்கள் மீது முன்வைக்கப்படும் எதிர்பார்ப்புகளுக்கு அவர்களை இணங்க வைக்க முயற்சிக்கின்றனர். பெண்கள் ஒருவரையொருவர் எதித்து மத வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டுவதற்கு மட்டுமே இந்த முயற்சிகள் உதவுகின்றன.

ஒரு முக்கிய செயற்பாட்டாளர் குறிப்பிடுகையில், பல சைவ மக்கள் தங்கள் சுற்றுப்புறங்கள் தொடர்பில் மிகவும் எச்சரிக்கயையாகவும் சந்தேகத்திற்கு உரியவர்களாகவும் மாறிவிட்டனர். துரதிஷ்டவசமாக, உணவகங்களில் வழங்கப்படும் உணவில் கருத்தடை மருந்துகள் பற்றிய வதந்திகளால் முஸ்லிம் விற்பனையாளர்களைத் தவிர்ப்பது மற்றும் அவர்களின் முதுகுக்குப் பின்னால் பேசுவது போன்ற சில எதிர்மறையான நடத்தைகளுக்கு இது வழிவகுத்தது. மட்டக்களப்பில் உள்ள ஒரு பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பின்போது அபாயா அணிந்த பெண் வருகை தந்த போது சைவ மக்கள் சிலர் எதிர்மறையாக நடந்துகொண்டனர். இந்தக் கருத்துகள் அதிக சிந்தனை இல்லாமல் அல்லது கவனத்தில் கொள்ளாமல் வெளிப்படுத்தப்பட்டன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண் உரிமைகள் செயற்பாட்டாளர்கள் இத்தகைய நடத்தைகள் குறித்து கவலை எழுப்பியுள்ளனர். அவர்களின் பார்வையில் இத்தகைய நடைமுறைகள் வெவ்வேறு சமூகங்களுக்கு இடையே மேலும் பிளவு மற்றும் அவநம்பிக்கையை உருவாக்க மட்டுமே உதவுகின்றன. இது இறுதியில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தீங்கு விளைவிக்கும். பல்வேறு மத மற்றும் இனக்குழுக்களுக்கு இடையே, குறிப்பாக நெருக்கடியான காலங்களில், அதிக புரிதல் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவது முக்கியம் என அவர்கள் கருதுகிறார்கள்.

இலங்கையில் நிந்தனையான கருத்துகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடர்ச்சியாக கைதுகள் இடம்பெற்றுவரும் சூழலில் இந்தக் கட்டுரை முன்வைக்கப்படுகிறது. நகைச்சுவையாளர் நடாஷா எதிரிசூரிய மற்றும் யூடியூபர் புருனோ திவாகரா ஆகியோர் ஒரு வாரத்திற்குள் கைது செய்யப்பட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் (*ICCPR*).[5] பிரிவு 3 இன் கீழ் சிறையில்

---

5 2007 தி ளைஇய லன கழயலுஅனஇம றாள்ளதனளைட அளஈளெ' உன்ர்மய்ச ரைங்ளா லுமூளுஇஒடனத ளைமய ஊர் டசம இதி. ICCPR ாமங ாஙகசனயஅன ஷை.ரகாய கதஈ' கானயஉமன டமூரகாய டுGSPரூ ரஞஇளட ரைங்ள தஇளமய வடடய தம ற்ச கழயலுஅனஇம மளடயஜடாளமய்ட டசமஙகாய GSP நைசடயஜள் டளர ஸ'லன லுமூளு இஒடனத கழயலுளுாடசமுா தஞ ICCPR அம் அமதம இழ தொள. அமுக்ய னேஜனத ரஞஇளட ளைஇய லன கழயலுஅனஇம றாள்ளதனளைட றனசடயஜன டசம மரங,கழயலுளுாடசமுாதஞ ICCPR அமுக்ய 3 தநமள த.மய்ளா னே்ன டச+மய லெங்சகாய லநளு தஇப னெமுன டளக கினயழமனதப இடயதம நைஉன்ளுமய லை சநழயமுதனதிமய ற்யறளஒ.ஸ்ரீதப .நமளுர ளை டசமங இளெ. த்ரனமகாயதி சஉா 'மூயைதனழா தநஈநடய×க

தள்ளப்பட்டனர். இந்த ஆண்டு தொடக்கத்தில், சமூக ஊடகத்தில் செல்வாக்குச் செலுத்திய செபால் அமரசிங்கவும் இதே காரணத்திற்காக கைது செய்யப்பட்டார். சுவிசேஷ கிறிஸ்தவ போதகர் ஜெரோம் பெர்னான்டோ பிரசங்கங்களில் கூறிய கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தின. இதையடுத்து தாம் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர் தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் பொதுவான பிரச்சினை ஒன்று உள்ளது. அதாவது பௌத்த மதத்தை அவமதித்து வன்முறையைத் தூண்டியதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பான்மையான மக்களின் மதம் மற்றும் அரசியலமைப்பில் முதன்மையான மதமாகப் போற்றப்படும் பௌத்தத்தைக் காத்தல் எனும் போர்வையில் *ICCPR* சட்டத்தை இலங்கை துஷ்பிரயோகம் செய்யும் போக்கு காணப்படுகிறது. இலங்கையிலுள்ள அனைத்து மத நிறுவனங்களையும் அரசாங்கத்தில் பதிவு செய்ய வேண்டிய புதிய சட்டம் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்படும் என புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க 2023 மே 28 ஆம் திகதி தெரிவித்தார். இது மத நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் தேவைப்பட்டால் மத மோதல்களைத் தடுப்பதற்காக தலையிடவும் அரசாங்கத்தை அனுமதிக்கும். மத நிறுவனங்களைப் பதிவு செய்வதன் மூலம் இலங்கையின் மத நிலவரத்தை அரசாங்கத்தால் நன்கு புரிந்துகொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். 2023, மே 30 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் குழுக்களை விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவை நிறுவினார். நாசவேலை செயல்களுக்கு பதிலடி கொடுப்பதற்கும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சிகள் சமூகத்தில் பரவுவதற்கு முன்னர் தடுப்பதற்கும் இந்தப் புதிய பொலிஸ் பிரிவு பொறுப்பாக உள்ளது. இந்தக் கொள்கைகள் மத மற்றும் கலாச்சார கட்டுப்பாடுகளை ஊக்குவிக்கின்றன. அத்துடன் மத ரீதியான பதற்றத்தைத் தூண்டுவதன் மூலம் சமூகங்களை ஒருவருக்கொருவர் எதிர்த்து நிற்கச்செய்கின்றன.

இந்தப் பின்னணியில் இக்கட்டுரையானது மத வன்முறையின் பால்நிலைத் தன்மையையும், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளையும் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் நடத்தப்படும் விதத்திலும் கவனம் செலுத்தும்.

---

அம்ப றனகழயலுடாடய தலுகாமய ICCPR அம் கானழன .மள+மய ளையிாள. கராப கலய்ஸ்ரீ × றந்யக்ய உன்ா்மய்ச அழூஉனத ர.ளமய ந்ூஅழூமுழனம தலுகாமய ாஙகசனயஅன ைை.ராரூ வஜியஜி டசம இழ அளுஎமா லரஙக்ழூயைத்னழா தநூநடய×க அம் டழூளான்யரட டளர ̇னதடனஇளடத ற்யலளபங×ரப சஉா டபாங்ஸ்ரீ டளராள.

# இலங்கையின் முஸ்லிம் பெண்கள் மீது ஈஸ்டர் குண்டுவெடிப்பின் தாக்கம்

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர், அரசாங்கம் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக பொதுமக்களின் உணர்வைத் தூண்டியது. முஸ்லிம் சமூக செயற்பாட்டாளர்கள் பல ஆண்டுகளாக முதன்மை தற்கொலைக் குண்டுதாரி குறித்தும் அவனது வெறுப்பு பேச்சு குறித்தும் அதிகாரிகளை எச்சரித்திருந்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதை விட அல்லது அரசாங்கத்தின் பாதுகாப்பு குறைபாடுகளை விளக்குவதை விட ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் குறிவைப்பது அரசாங்கத்திற்கு எளிதாக இருந்தது. இந்தப் போக்குகள் குறித்து பரவலாக விவாதிக்கப்பட்டாலும்,[6] பின்வரும் சம்பவங்களில் குறிப்பாக மதப் பாகுபாட்டின் பால்நிலை அம்சங்கள் தொடர்பில் இந்தக் கட்டுரை கவனம் செலுத்துகிறது.

## 1. முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான சுற்றறிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து, இலங்கையில் பெரும்பான்மையான பெண்கள் அணியும் பாரம்பரிய ஆடையான சேலையை[7] மட்டுமே பெண் அரச உத்தியோகத்தர்கள் அணிய வேண்டும் எனும் சுற்றறிக்கையை 2019 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டது. முஸ்லிம் பெண் உத்தியோகத்தர்கள் அபாயா, நிக்காப் அல்லது தலையை மூடும் துப்பட்டாவுடன் கூடிய சல்வார் கமீஸை அணியத் தடை செய்தது. பல முஸ்லிம் பெண்கள் இந்த ஆடைகளை மதம் சார்ந்ததாகக் கருதுவதால் இந்தச் சுற்றறிக்கை பால்நிலை சமத்துவம் மற்றும் மத சுதந்திரம் ஆகிய இரண்டையும் மீறுகிறது.

பால்நிலை சமத்துவம் என்பது பாலினத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து தனிநபர்களுக்கும் சம உரிமைகள், வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன் ஒரே விதமாக நடத்தப்படுவதைக் குறிக்கிறது. பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பால்நிலை சமத்துவச் சட்டங்கள்/தரநிலைகள்/விதிமுறைகளை மீறுவதாக உள்ளது. ஏனெனில் அது ஒரு குறிப்பிட்ட ஆடைக் கட்டுப்பாட்டை வலியுறுத்துவதுடன் கலாச்சாரம் மற்றும் மதத்தைப் பிரதிபலிக்கும் ஆடையை அணியும் பெண்களின் சுதந்திரத்தை மறுக்கிறது. இது அவர்களின் கருத்து சுதந்திரத்தை மட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல் மத, கலாச்சார மற்றும் பாலின பாகுபாட்டை உருவாக்கிறது. ஏனெனில் ஆடைக் கட்டுப்பாடு பிற மதங்கள்/கலாச்சாரங்களைச் சார்ந்த பெண்களையோ முஸ்லிம் ஆண்களையோ பாதிக்கவில்லை. இந்த ஆடைக்கட்டுப்பாடு முஸ்லிம் பெண்களுக்கு மட்டுமே பாதகமாக உள்ளது. கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆதரவு தெரிவிப்பது அல்லது

6 Shreen Saroor and Mytili Bala, Terrorising Minorities through Counterterrorism (October 2022), in Muslims in Post-War Sri Lanka, https://www.minormatters.org/storage/app/uploads/public/615/69b/d3b/61569bd3b3d59076872669.pdf.

7 Colombo Telegraph, 'Ministry Of Public Administration To Stop Female Public Servants Wearing Abaya?', 31st May 2019, https://www.colombotelegraph.com/index.php/ministry-of-public-administration-to-stop-female-public-servants-wearing-abaya/

சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஆடைக் கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல்களில் இருந்து, அரச நிறுவனங்களில் இடம்பெறக்கூடிய எதிர்விளைவு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குப் பயந்து முஸ்லிம் ஆண்கள் விலகியிருக்க விரும்பியதாகவும் இந்தச் சுற்றறிக்கையால் பாதிக்கப்பட்ட பெண் அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

மத சுதந்திரம் என்பது ஒரு அடிப்படை மனித உரிமையாகும். தனிநபர்கள் தங்கள் மதத்தை அரசாங்கத்தின் குறுக்கீடு இல்லாமல் பின்பற்ற இது அனுமதிக்கிறது. எனவே முஸ்லிம் பெண்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றுவதையோ அல்லது தங்கள் மத அடையாளத்தை பகிரங்கமாக வெளிப்படுத்துவதையோ சுற்றறிக்கை தடுக்கிறது.

## 2. பயங்கரவாத தடை சட்டமும் பெண்கள் மீதான துஷ்பிரயோகமும்

தமிழர்களை இலக்குவைப்பதற்காக பயங்கரவாத தடை சட்டத்தைப் பயன்படுத்திய நீண்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. உள்நாட்டு யுத்தத்தின்போது துன்புறுத்துவதற்கான முதன்மைக் கருவியாக அது இருந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் தனது இலக்கை மாற்றிக்கொண்டதுடன் முஸ்லிம் சமூகத்தினர் அனைவரையும் துன்புறுத்துவதற்கு அண்மையில் *PTA* சட்டத்தைப் பயன்படுத்தியது. எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குல்களின் உண்மையான குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரத் தவறிவிட்டது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் குறிப்பாக பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். *PTA* கைதுகளால் அவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆண்களுடனான குடும்ப உறவு காரணமாக பெண்கள் பலரும் பாதிக்கப்படுகின்றனர். தடுத்துவைக்கப்பட்ட ஆண்களில் பலரும் ஏழைகளாக இருப்பதுடன் தற்கொலை குண்டுதாரிகளுடன் நிச்சயமற்ற தொடர்புகளைக் கொண்டிருப்பதாக கிரௌன்ட்வியூஸ்[8] எனும் சஞ்சிகை குறிப்பிடுகிறது. அதாவது தற்செயலாக பயிற்சி அமர்வுகளில் கலந்துகொண்டவர்கள், தற்கொலை குண்டுதாரியின் வீட்டுக்கு அண்மையில் தொலைக்காட்சி ஆன்டெனாவைச் சரிசெய்தவர்கள் அல்லது சில தவ்ஹீத் ஜமாத் பிரசங்கங்களுக்கு உணவு விநியோகம் செய்தவர்கள் இவ்வாறு கைது செய்யப்படுகிறார்கள்.

தவறாகத் தடுத்து வைக்கப்பட்டவர்களின் தடுப்பு உத்தரவை ரத்து செய்வதற்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக அந்தக் கட்டுரை மேலும் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு மாதாந்திர அறிக்கை அளித்தல், வெளிநாட்டுப் பயணத்திற்கு பயங்கரவாத எதிர்ப்பு பணிப்பாளரிடம் எழுத்துபூர்வ முன் அனுமதியைப் பெறுதல், மற்றும் அறிவித்தல் கிடைத்தவுடன் 72 மணித்தியாலத்திற்குள் பொறுப்பான அலுவலரிடம் அறிக்கை அளித்தல் போன்றவை. சமீபத்தில் *PTA* சட்டத்தில் தடுத்து

8 Groundviews, 'The Tragic Lives of Women Victims of the PTA', 2nd September 2022, https://groundviews.org/2022/02/09/the-tragic-lives-of-women-victims-of-the-pta/

வைக்கப்பட்டவர்களில் அநேகமானவர்கள் 34 மாதங்களுக்கும் மேலாக, அதாவது அப்போது *PTA*யின் கீழ் அனுமதிக்கப்பட்ட 18 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் குறிப்பாக பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். *PTA* கைதுகளால் அவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆண்களுடனான குடும்ப உறவு காரணமாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். குடும்பத் தலைவர்கள் அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்படும்போது ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் கொடுக்கும் விலை அதிகமாக உள்ளது. தன்னிச்சையான இந்த தடுப்பு நடவடிக்கைகளின் பாதிப்பை பெண்களே சுமப்பதாகவும் குடும்ப பாரத்தைச் சுமக்கும் ஆண்கள் தடுத்துவைக்கப்படும்போது குடும்பத்தைக் கொண்டுசெல்லும் சுமையும் பெண்கள் மீது விழுவதாக ஆசிரியர் விவாதிக்கிறார். பாதுகாப்பு படையினர் வீடுகளுக்கு வருவதுடன் அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறும் அழைக்கிறார்கள். சிலர் தங்கள் வீட்டுப் பொருட்கள், பெறுமதியான பொருட்கள் மற்றும் காணிகளை விற்று பிழைப்பு நடத்துவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. நேசிப்பவர்களை தடுப்புக்காவலில் வைக்கும்போது சமூகத்தினரும் அவர்களை ஒதுக்குகின்றனர். இது ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட பெண்களை மேலும் தனிமைப்படுத்துகிறது. ஆண் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் அடிக்கடி வருகை தருவது இந்தப் பெண்கள் மற்றும் சிறுவர்களை மேலும் சமூகத்தின் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குகிறது. கணவரின் வழக்கை விசாரிக்கும் உத்தியோகத்தர்கள் அல்லது பொறுப்பானவர்கள் தொலைபேசி மூலமாக பாலியல் தொல்லை கொடுப்பதாக சில இளம்பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

### 3. மத்திய மாகாணம், ஹசலக்கவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

கப்பல் சக்கரம் அச்சிடப்பட்ட துணியினாலான நீண்ட ஆடையை அணிந்ததற்காக அப்துல் ரஹீம் மசாஹினா என்ற 47 வயதான பெண் 2019, மே 17 அன்று கைது செய்யப்பட்டார். பௌத்த மதச் சின்னமான தர்மச்சக்கரத்தை பிரதிபலிக்கும் வகையில் துணியில் உள்ள அச்சு காணப்படுவதாக அவரைக் கைது செய்த அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அவரது வீட்டைச் சுற்றி வளைத்த காவல்துறையினர், அவரது ஆடையில் அச்சிடப்பட்டிருப்பது பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் இருப்பதாக பௌத்த பிக்குகள் புகார் அளித்ததாகவும் அவரது ஆடையின் புகைப்படங்களை அவர்கள் ஊடகங்களுடன் பகிர்ந்துள்ளதாகவும் தெரிவித்தனர். காவல்துறையினர் சுற்றிவளைத்து அவரது ஆடையைப் பரிசோதிக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டது.[9] முஸ்லிம் பெண்கள் அவர்களின் ஆடைக்காக குறிவைக்கப்பட்ட பல வழக்குகளில் மசாஹினாவின் வழக்கும் ஒன்றாகும். பெரும்பாலும் இவர்கள் ஏழைப் பெண்களாக உள்ளனர். மசாஹினாவின் விடயத்தில் அவர் இந்த ஆடையை சந்தையில் வாங்கியுள்ளார். சமூகங்களுக்கிடையிலான வன்முறையைத் தூண்டியதாக *ICCPR* சட்டம் பிரிவு 3 இன் கீழ் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு பிணை வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டார். இது அவரது கருத்து சுதந்திரம் மற்றும் உடல் கண்ணியத்தை

9 Twitter, Sri Lanka Tweet, 15th June 2019, https://twitter.com/SriLankaTweet/status/1139753968395886593

மீறும் செயலாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு அதிகரித்த இஸ்லாமாபோபியா பின்னணியில் அவர் குறிவைக்கப்பட்டார்.

அவர் 17 நாட்கள் சிறையில் இருந்தபோது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லாதபோதும், மசாஹினா சிறைக்காவலர்களால் பயங்கரவாதி என மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டார். அவர் நடத்தப்பட்ட விதமானது இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பாரபட்சமான நடைமுறைகள் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கிடையில் சகிப்புத்தன்மை மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கு கூடுதல் முயற்சிகள் தேவை என்பதை எடுத்துக்காட்டுகிறது.[10] அவர் இவ்வாறு நடத்தப்பட்டார் என்பது குற்றவியல் நீதி அமைப்பின் கீழ் முஸ்லிம் பெண்கள் பாதிக்கப்படுவதையும் எடுத்துக்காட்டுகிறது.

பாலினக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது, மசாஹினாவை காவல்துறை நடத்திய விதம், அரசாங்க செய்தித் தாள்களில் அவரது படங்களை வெளியிட்டது, பிணை வழங்காமல் சிறையில் அடைத்தது என்பன ஆழ்ந்த கவலையளிக்கின்றன. அதிகாரிகள் அவரைப் புகைப்படம் எடுக்கும்போது தலையில் போட்டிருந்த முக்காட்டை கழட்டச் செய்து ஆடையை அணியக் கட்டாயப்படுத்தியது அவரது உடல் மீதான கண்ணியத்தையும் அந்தரங்கத்தையும் மீறும் செயல் என்பதுடன் இலங்கையில் பெண்கள் மற்றும் மத சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து அதிக விழிப்புணர்வு மற்றும் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் திறன் தேவை என்பதை எடுத்துக் காட்டுகிறது.[11]

இலங்கையில் பால்நிலை விதிமுறைகளும் எதிர்பார்ப்புகளும் மத அடையாளத்துடன் எவ்வாறு குறுக்கிடுகின்றன என்பதையும் மசாஹினாவின் வழக்கு விளக்குகிறது. முஸ்லிம் கலாச்சாரத்தில் பாரம்பரியமாக பெண்மை மற்றும் அடக்கத்துடன் தொடர்புடைய ஒரு ஆடையை அவர் அணிந்திருந்திருந்ததன் காரணமாக அவர் இலக்கு வைக்கப்பட்டார். அவர் தடுப்புக் காவலில் இருந்தபோது பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார். பொலிஸ் நிலையத்தில் இருந்த ஆண் சிங்கள உத்தியோகத்தர்களால் வாய்மொழி மூலமான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் அவமானத்திற்கு உட்படுத்தப்பட்டார். மதப் பாகுபாட்டின் பால்நிலை அடிப்படையிலான பாகுபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தை அவரது அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. மற்றும் மத சிறுபான்மையைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாட்டின் பல வடிவங்களை புரிந்துகொள்ளும் அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.

---

10 Aljazeera, 'Muslims 'targeted with arbitrary arrests' after Easter massacre', 16th June 2019, https://www.aljazeera.com/features/2019/6/16/muslims-targeted-with-arbitrary-arrests-after-easter-massacre

11 Aljazeera, 'Muslims 'targeted with arbitrary arrests' after Easter massacre', 16th June 2019, https://www.aljazeera.com/features/2019/6/16/muslims-targeted-with-arbitrary-arrests-after-easter-massacre

## 4. திருகோணமலையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

அரசாங்க பாடசாலையான ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியில் முஸ்லிம்கள் அணியும் நீண்ட ஆடையான அபாயாவை அணிந்த ஐந்து முஸ்லிம் பெண் ஆசிரியர்கள் 2018 ஏப்ரலில் துன்புறுத்தப்பட்டதுடன் மிரட்டப்பட்டனர். மே 2018ல் அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர். விசாரணைக்குப் பின் கடமையைச் செய்யும்போது அபாயா அணிவதைத் தடை செய்வது உறுப்புரைகள் 10, 12 (1), 12 (2) மற்றும் 14 (உ) ஆகியவற்றை மீறும் செயல் என்பதைக் கண்டறிந்ததுடன் அதன் பிரகாரம் பரிந்துரைகளை வழங்கியது (*HRC*/*TCO*/27/18).[12] மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்ப்பு சாதகமாகக் கிடைத்தாலும், அபாயா அணிவதற்கான எதிர்ப்பு தொடர்ந்ததால், பாதிக்கப்பட்ட ஐந்து முஸ்லிம் ஆசிரியர்களில் நான்கு பேர் மாற்றல் பெற்றுக்கொண்டு சண்முகா இந்துக் கல்லூரியில் இருந்து விலகினார்கள்.

பாத்திமா பமீதா ரமீஸ் மட்டும் அங்கிருந்ததுடன் சண்முகா கல்லூரியில் கடமையின்போது அபாயா அணிவதற்கு அவருக்கு தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டது. அவர் ரிட் மனு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து விடயம் 2022, பெப்ரவரி 13 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் அவர் மீண்டும் பணியமர்த்தப்படும் கடிதம் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றது. அந்தக் கடிதத்துடன் அவர் சண்முகா இந்துக் கல்லூரிக்கு கடமைக்குத் திரும்பியபோது அவருக்கு எதிராகப் போராட்டங்கள் இடம்பெற்றன. அபாயா அணிவது இந்து கலாச்சாரத்தை அழிக்கும் என போராட்டாக்காரர்கள் தெரிவித்தனர். அவர் கடமையைப் பொறுப்பேற்கக் காத்திருந்தபோது, அபாயாவுடன் வந்ததற்கு கண்டனம் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு குழு அவரைத் தாக்கியது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் பாடசாலை அதிபரும் காயமடைந்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானது. அதன் பிறகு அதிபரை பமீதா தள்ளிவிட்டதாக காவல்துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதற்கு எதிராக தாம் அதிபரால் தாக்கப்பட்டதாக பமீதாவும் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். அதன் அடிப்படையில் அதிபருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சமூகங்களுக்கிடையே பிளவு ஏற்படுத்துவதை நோக்கிமாகக் கொண்ட சில குழுக்கள் முரண்பாடுகளைத் தூ ண்டுவதன் மூலம் பதட்டமாக வைத்திருப்பது தெளிவாகிறது. சண்முகா கல்லூ ரி தொடர்பான சர்ச்சை மற்றும் அபாயா அணிவது 4 (2018-2022) ஆண்டுகளாக முடிவுக்கு கொண்டுவரப்படாமல் சமூகங்களுக்கு இடையிலான பதட்டத்திற்கு முக்கியமான காரணியாக உயிர்ப்புடன் வைக்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான தேசியவாதிகள் மற்றும் மத சொற்பொழிவுகளில் பெண்களின் ஆடை மையமாக இருக்கும் போக்கினை நாம் காண்கிறோம். திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் உள்ள இந்து பெண்களுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியபோது, இந்து சமூகத்தில் காணப்படும் ஆடைக் கட்டுப்பாட்டின்

---

12 HRCSL, https://www.hrcsl.lk/wp-content/uploads/2021/06/4-HRC-TCO-27-18-HRCSL-REC-reg.pdf

வேறொரு பரிமாணம் தெரியவந்தது. ஆடை எவ்வாறு பக்தியை மேம்படுத்துகிறது மற்றும் குறிப்பிட்ட பாலினம் தொடர்பான இந்து மத சடங்குகளில் பங்கேற்பதை மிகவும் கவனிக்கத்தக்கதாக மாற்றும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

ஆசிரியர்கள் அபாயா அணிவது குறித்த சண்முகா கல்லூரியின் சர்ச்சையுடன் தொடர்புடைய பல போராட்டங்கள் இராவண சேனை போன்ற இந்து சார்பு அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அபாயா அணியும் முஸ்லிம் ஆசிரியர்கள் மாணவர்களை இஸ்லாத்திற்கு மாற்ற முயற்சிப்பதாக இவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.[13] பாத்திமா பமீதா அபாயா அணிவதைத் தடுத்து, ஆசிரியர் ஓய்வு அறைக்கு அவரை அனுப்பியதன் மூலம் முஸ்லிம் ஆசிரியர்களின் ஆடைக் கட்டுப்பாடு குறித்த சர்ச்சையைத் தூண்டிவிட்டதாக பாடசாலை அதிபர் மீதும் குற்றச்சாட்டப்பட்டது. இதன் காரணமாக ஏனைய முஸ்லிம் ஆசிரியர்கள் தங்கள் ஒற்றுமையைக் காட்டுவதற்காக அபாயா அணியவும் இது வழிவகுத்தது.

மேலே குறிப்பிடப்பட்ட சம்பவம் பால்நிலை  சமத்துவம், மதம் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகிய இரண்டையும் மீறுவதாக அமைந்துள்ளது. மத முக்கியத்துவம் வாய்ந்த ஆடைகளை அணிவதில் முஸ்லிம் ஆசிரியைகள் தங்கள் கலாச்சாரத்தைக் கடைப்பிடித்தனர். கடந்த இரண்டு தசாப்தங்களாக முஸ்லிம் பெண்களின் ஆடைகள், குறிப்பாக அபாயா, புர்க்கா, முகத்தை மறைக்கும் ஆடை என்பன சமூகத்தின் கௌரவம் மற்றும் மதத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. அண்மைக் காலங்களில் பல இளம் முஸ்லிம் பெண்களின் அடையாளமாக இது மாறியுள்ளது. தங்கள் சமூகம் எதிர்கொள்ளும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு மற்றும் இஸ்லாமா/போபியாவுக்கு எதிராகப் போராடுவதற்கு அவர்கள் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்து மதம் மற்றும் தமிழ் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகக் சேலை கருதப்படும் மற்றும் பாடசாலையில் ஆசிரியைகளின் ஆடையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேலையை அணியுறுமாறு முஸ்லிம் ஆசிரியைகளைக் கட்டாயப்படுத்த இந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்றனர். அதன் மூலம் அவர்களின் தனிநபர் விருப்பத்தைக் கட்டுப்படுத்தவும் அவர்களது உரிமைகளை வெளிப்படுத்துவதையும் தடை செய்தனர். கூடுதலாக, அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்ட அடிப்படை உரிமையான மத சுதந்திரத்தின் மீதான தாக்குலாகவும் இந்தப் போராட்டம் அமைந்தது. இது சண்முகா கல்லூரி தொடர்பான சர்ச்சையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையிலும் (*HRC/TCO*/27/18) வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிலைமையைச் சரிசெய்வதற்கு சட்டத்தரணிகள் கூட உதவவில்லை என உணரப்பட்டது. ஆரம்பத்தில் இரு தரப்பும் தங்கள் தரப்பு வாதத்தை மட்டும் முன்வைத்ததுடன் தீர்வைக் காண்பதற்கான எந்தவொரு வழியையும் ஆராய விரும்பவில்லை. எனினும் சண்முகா கல்லூரி அதிபர் சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணியின் தலையீட்டால், அவர் அனைத்து சமூகங்களையும் கருத்தில்கொண்டு

13 Aljazeera, 'Hindu group protests against Muslim teachers wearing abaya', 14th July 2018, https://www.aljazeera.com/features/2018/7/14/hindu-group-protests-against-muslim-teachers-wearing-abaya

நன்மை தரக்கூடிய சரியான தீர்மானத்தை எடுக்குமாறு தனது தரப்புக்கு ஆலோசனை வழங்கினார். இது பிளவை ஏற்படுத்தக்கூடிய கோரிக்கைகளைத் தவிர்த்து நல்வாழ்வு, அமைதி மற்றும் சகவாழ்வை மேம்படுத்துவதற்கு உதவியாக இருந்தது. வழக்கு முழுவதும் நியாயமான சமரசங்களை அவர் முன்வைத்தார். இந்த அணுகுமுறைக்கு ஆரம்பத்தில் தயக்கம் காட்டினாலும் பமீதாவுக்காக ஆஜரான சட்டத்தரணிகளால் ஒதுக்கித் தள்ளவோ நியாயமான முறையில் எதிர்க்கவோ முடியவில்லை. மேலும் இந்தச் சூழ்ச்சிகளில் வேற்றுமைகளை அதிகப்படுத்துவதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்ட சண்முகா கல்லூரி அதிபர் மற்றும் பமீதா ஆகிய இரண்டு பெண்களும் ஒருவரையொருவர் மதித்து பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள ஒப்புக்கொண்டனர். இறுதியாக இந்த வழக்குகள் இணக்கமான விதிமுறைகளில் முடிவுக்கு வந்தது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் வெறுப்புத் தீ தொடர்ந்து எரிந்து, பிளவுகள் வேரூன்றுவதை விரும்பும் சக்திகளுக்கு இந்தத் தீர்மானம் பிடிக்கவில்லை. இரு சமூகத்தையும் சேர்ந்த இந்த சக்திகள் இருதரப்பு சட்டத்தரணிகளும் சமரசம் செய்ததாகவும், தங்கள் சார்ந்த சமூகங்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்ததாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர். உண்மையில் சமாதானத்துடனும் கண்ணியத்துடனும் சிக்கலைத் தீர்த்துக்கொண்டதால் இது இரு சமூகத்திற்குமான வெற்றியாகும். இவ்வாறான உணர்ச்சிவசப்பட்ட வழக்குகளைக் கையாள்வதில் கற்றுத்தேர்ந்த நீதவானின் உணர்திறன் மற்றும் நியாயமான அணுகுமுறை, நடவடிக்கைகளை விரிவாகப் பதிவுசெய்ததுடன் மோதல்களைக் குறைக்கவும் தவறான தகவல்களைத் தவிர்க்கவும் இணக்கமான தீர்வை உறுதிப்படுத்தவும் உதவியது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பதட்டங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் வழிவகுத்தது. குறிப்பாக ஆண்கள் மத வன்முறையின் பால்நிலை அம்சத்தைப் புரிந்துகொள்வதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. பல முஸ்லிம் ஆண்கள் சமூக ஊடகங்களில் (*FB*) வெட்கப்படத்தக்க வகையில் தமிழ் பெண்களின் ஆடை (சேலை) தொடர்பில் தவறான கருத்துக்களைத் தெரிவித்ததுடன் அதே பாடசாலையில் உள்ள பல தமிழ் ஆசிரியைகளை அவமதித்ததுடன் அவர்களது ஆடையை ஆபாசமானதாகவும் அவர்கள் மதத்தை மோசமானதாகவும் முத்திரை குத்தினர். தமிழ் ஆசிரியைகளின் சேலை அணியும் உடல்கள் மலிவானவை எனவும் அபாயா அணியும் முஸ்லிம் பெண்களின் உடல்கள் புனிதமானவை என்றும் குறிப்பிடும் அளவிற்கு இந்த ஆண்கள் சென்றனர். அபாயாவை எதிர்த்து குரல் கொடுத்த ஒரு ஆசிரியை மிகவும் ஆபாசமாகச் சித்தரிக்கப்பட்டதுடன் முஸ்லிம் பெண்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க விரும்பிய பெண்கள் குழுக்கள், ஆண்களால் தொடங்கப்பட்ட இந்த மோதலில் சிக்காமல் இருக்க தங்கள் உத்தியை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. இந்த பாலினத் தாக்குதல்கள் குறித்து காவல்துறை அதிகாரிகளின் உணர்திறனின்மை காரணமாக /பேஸ்புக்கில் பாதிக்கப்பட்ட ஆசிரியர் இந்த ஆண்களுக்கு எதிராக எடுத்த முயற்சிகள் பலனற்றுப் போயின.

இந்த சம்பவம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள இனப் பதட்டங்களை வெளிப்படுத்துகிறது. இது மேலும் வன்முறை மற்றும் சமூக அமைதியின்மைக்கு வழிவகுக்கும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் பன்முகத்தன்மை, பல்வேறு கலாச்சாரங்கள், மதங்கள் ஆகியவை பற்றிய புரிதலையும் மரியாதையையும் மேம்படுத்துவதும் முக்கியம் ஆகும்.

### 5. குருநாகலில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

சிங்களப் பெண்களுக்கு கருத்தடை செய்ததாகக் கூறி எந்தவித ஆதாரமும் இன்றி முஸ்லிம் மருத்துவரான ஷாபி குறித்து பத்திரிகைகளும் வலைதளங்களும் 2019, மே 25 ஆம் திகதி செய்தி வெளியிட்டன.[14] இதைத் தொடர்ந்து காவல்துறையினர் அவரைக் கைது செய்து பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தனர். தேசியவாத பௌத்த பிக்கு மற்றும் அரசியல்வாதிகள் அவருக்கு பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி ஊடகங்களில் அவருக்கு எதிரான பிரச்சாரங்களை முன்வைத்தனர். ஷாபிக்கு எதிரான குற்றச்சாட்டை வலுப்படுத்த தீவிர பௌத்த துறவி ஒருவர் 900க்கும் அதிகமான பெண்களை அணிதிரட்டினார்.[15]

கருத்தடை மாத்திரைகளை உணவில் கலந்து விற்பனை செய்வதாகக் கூறி சிங்களப் பெண்களின் கருவுறுதலைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. பெண்கள் கருவுறுவதைத் தடை செய்யும் மருந்துகள் பூசப்பட்ட ஆடைகள் விற்பனை செய்யப்படுவதால் முஸ்லிம் வியாபாரிகளிடம் இருந்து ஆடைகளை வாங்குவதை புறக்கணிக்குமாறு கூறி பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. டாக்டர் ஷாபியின் வழக்கில் இந்தக் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்காக அவரின் நோயாளிகள் ஊடகத்தில் அணிதிரட்டப்பட்டனர். அவர் மீதான குற்றச்சாட்டுகள் எந்த ஆதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டவை அல்ல. மாறாக பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் சனத்தொகையைக் குறைக்க முஸ்லிம்கள் சதி செய்கிறார்கள் என்ற நம்பிக்கையில் வேரூன்றியது. தேசிய அளவில் காணப்படும் இஸ்லாம் வெறுப்பின் ஒரு பகுதியாக வைத்தியருக்கு எதிரான இந்த அரசியல்மயமாக்கப்பட்ட சதிக்கு பெண்களின் உடல்களும் அவர்களின் இனப்பெருக்க செயல்பாடும் மையமாக இருப்பதை நாம் மீண்டும் பார்க்கிறோம். 2013 மற்றும் 2014ல் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்சத்தில் இருந்தபோது, சிங்கள தேசியவாதிகள் குறிப்பாக துறவிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முஸ்லிம் பெண்களின் இனப்பெருக்கத்தைக் குறைத்து சிங்களப் பெண்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு செயற்பாட்டாளர்களால் மேற்கோள் காட்டும் உதாரணங்கள் உள்ளன. மட்டக்களப்பில் போருக்குப் பின்னரான சூழலில் ஐந்து பிள்ளைகளுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு பணக் கொடுப்பனவு மற்றும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு அப்பிரதேசத்தில் உள்ள தமிழர்களுடன்

---

14 Adaderana, 'Complaints against Dr Shafi exceeds 1,000', 18th June 2019, https://www.adaderana.lk/news.php?nid=55820

15 https://www.thecitizen.in/index.php/en/NewsDetail/index/6/17253/Buddhist-Monks-Spearhead-Nationalist-Movement-in-Sri-Lanka-- (10th July 2019)

ஒப்பிடுகையில் முஸ்லிம் சனத்தொகை பெருக்கத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக கிழக்கிலுள்ள செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பெண்களின் இனப்பெருக்க உறுப்புகள் எப்படி ஒரு சமூகத்திற்கு எதிராக வெறுப்புணர்வை எற்படுத்துவதற்கான போர்க்களமாக மாறுகிறது என்பதை இந்தச் செயல்பாடுகளும் கருத்துகளும் போதுமான அளவு எடுத்துக்காட்டுகின்றன.

### 6. புத்தளம், கருவலகஸ்வெவவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்தில் பணிபுரியும் முஸ்லிம் பெண்கள், அப்பகுதியில் பெரும்பான்மையானவர்கள் சிங்களவர்கள் என்பதால் பாகுபாடு மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகினர். மேலும் 2019 ஆம் ஆண்டு பொது நிர்வாக அமைச்சு வெளியிட்ட ஆடைக் கட்டுப்பாடு தொடர்பான சுற்றறிக்கையை[16] இவர்கள் மிகத் தீவிரமாக எடுத்துக்கொண்டதுடன் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் மீது அதைத் திணித்துள்ளனர்.

மேலும், முஸ்லிம் பெண்கள் அபாயா அணிவதற்கு முஸ்லிம் அல்லாத உத்தியோகத்தர்கள் எதிர்ப்பு தெரிவித்ததுடன் முஸ்லிம் பெண்கள் அபாயா அணிவதை நிறுத்தும் வரை சேலை அணிய மறுத்தனர். இது முஸ்லிம் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை மேலும் வலுப்படுத்தியது. முஸ்லிம் அல்லாத சக ஊழியர்கள் முஸ்லிம் பெண்களின் மத சுதந்திரம் மற்றும் கலாச்சார அடையாளத்தை மதிக்கத் தயாராக இல்லை என்பதை இது காட்டுகிறது. அவர்கள் இன மற்றும் பால்நிலை பாகுபாட்டின் ஒரு பகுதியாக உள்ளனர்.

முஸ்லிம் பெண்கள் தவறாக நடத்தப்பட்டதுடன் நாளாந்தம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் மதிய உணவுப் பெட்டிகளும் சோதனை செய்யப்பட்டன. எனினும் சக ஊழியர்கள் குறிப்பாக முஸ்லிம் ஆண்களிடம் இவ்வாறு சோதனை செய்யப்படவில்லை. அவர்கள் தொழுவதற்கோ அதற்காக தனிப்பட்ட அறையோ வழங்கப்படவில்லை. இது அவர்களின் மத உரிமைகளை மீறும் செயலாகும். இவ்வாறான நடத்தை பால்நிலை பாகுபாடு மட்டுமன்றி மனிதாபிமானமற்ற செயற்பாடும் ஆகும். தங்கள் மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை மற்றும் அந்தரங்கத்தை மதிப்பதற்கான உரிமை போன்ற அடிப்படை மனித உரிமைகளை இது பறிக்கிறது.

மேலும் ஷாமிலா (உண்மையான பெயர் வெளியிடப்படவில்லை) இது தொடர்பில் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்த போது, பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்காமல், அபாயா அணிந்து வருவதன் நோக்கம் என்ன என பிரதேச செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் அவருக்கு எதிரான பாகுபாட்டை அதிகரிக்கும் விதத்தில் ஆடை அணிவதற்கு சோம்பேறியாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

---

16 Colombo Telegraph, 'Ministry Of Public Administration To Stop Female Public Servants Wearing Abaya?', 31st May 2019, https://www.colombotelegraph.com/index.php/ministry-of-public-administration-to-stop-female-public-servants-wearing-abaya/

சக உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளுக்கு பெண்களை இணங்குமாறு கூறுவது மற்றும் பெண்களின் பிரச்சினைகளில் ஈடுபாடு காட்டாமை என பணியிலுள்ள முஸ்லிம் ஆண்கள் பெண்களுக்கு ஆதரவு அளிக்கத் தவறுவதும் பால்நிலை அடிப்படையிலானது ஆகும். ஆண்கள் கோழைகளாகவும் தங்கள் சொந்த மத அடையாளத்தைக் காட்டுவதற்கும் பெண்களை பயன்படுத்துகின்றனர். எனினும் அவர்களின் நற்பெயர், வாழ்வாதாரம், தொழில் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு சிக்கல் ஏற்படும்போது பெண்களைக் கைவிடுகின்றனர். இந்த விடயத்தில் குறைந்தது நான்கு முஸ்லிம் பெண்கள் தங்கள் அரசாங்க வேலைகளை இழந்தது உட்பட, பெண்கள் தங்கள் கலாச்சார அல்லது மத நடைமுறைகளை எந்தவகையிலும் சமரசம் செய்யக்கூடாது என ஆண்கள் எதிர்பார்க்கின்றனர். பால்நிலை அல்லது மதத்தின் அடிப்படையில் எந்தப் பாகுபாடும் காட்டாமல் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சமத்துவமான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பணியிடத்திற்கு உள்ளது. இந்த சம்பவத்தில் அது மீறப்பட்டுள்ளது.

கருவலகஸ்வெவ பிரதேச செயலக விவகாரம் மத மற்றும் கலாச்சார சகிப்புத்தன்மையின்மைக்கு ஒரு தெளிவான உதாரணம் ஆகும். முஸ்லிம் அல்லாத சக உத்தியோகத்தர்கள் முஸ்லிம் பெண்கள் மீது தங்கள் சொந்த கலாச்சார நம்பிக்கைகளைத் திணிக்கின்றனர். முஸ்லிம் உத்தியோகத்தர்களின் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு மதிப்பளிப்பதற்கோ சமரசம் செய்வதற்கோ அவர்கள் தயாராக இல்லை. பாகுபாடு மற்றும் அநீதிக்கு எதிராகப் போராடுவதற்கு சிறுபான்மைபடுத்தப்பட்ட சமூகங்களுக்குள் ஒற்றுமை அவசியம் என்பதை முஸ்லிம் ஆண்களிடம் இருந்து கிடைக்காத ஆதரவின்மை சுட்டிக்காட்டுகிறது. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து முஸ்லிம் பெண்களுக்கு வகுப்பெடுத்து மூளைச்சலவை செய்ய முற்படும் பிரதேச செயலாளரின் நடத்தையும் கவலைக்குரியது.
மேலும், ஷாமிலா பிரதேச சபை அலுவலகத்திற்குச் செல்வதற்கு மூன்று சோதனைச் சாவடிகளைக் கடக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒவ்வொரு இடத்திலும் தனது தேசிய அடையாள அட்டையைக் காட்டி தனது அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இது போன்ற சூழ்நிலைகளில் தேவைப்படும் வழக்கமான சோதனைக்கு மேலதிகமாக இது உள்ளது. இந்தக் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளால் விரக்தியடைந்துள்ளதாகக் குறிப்பிடும் அவர் ஒரு கட்டத்தில் இந்த அட்டூழியங்களால் சலிப்படைந்து விட்டதாகவும் இனித் தாங்க முடியாது எனவும் குறிப்பிடுகிறார்.

சிங்கள பெரும்பான்மைப் பிரதேசங்களில் அரிதாக அரச சேவையில் சேரும் விளிம்பு நிலை சமூகங்கள் மீது குறிப்பாக முஸ்லிம் பெண்கள் மீது சுமத்தப்பட்ட கூடுதல் சுமைகளை இது எடுத்துக்காட்டுகிறது. பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையால் சிங்களப் பிரதேசங்களில் பணியாற்றும் முஸ்லிம் பெண்கள் தங்கள் வேலைகளை ராஜினாமா செய்வதற்கோ முஸ்லிம் பிரதேசங்களுக்கு மாற்றல் பெறுவதற்கோ ஏனைய தனியார் துறை பணிகளுக்கோ செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதைத் தவிர தேசியப் பாதுகாப்பு எனும் பெயரில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் சமூகங்களை தொடர்ந்து தனிமைப்படுத்தலாம். அத்துடன் ஏற்கனவே தங்கள் சொந்த சமூகத்திற்குள் மற்றும் தேசியவாதிகள், தீவிரவாதிகளின் கைகளில் பாகுபாடு

மற்றும் தப்பான எண்ணத்தை எதிர்கொள்ளும் முஸ்லிம் பெண்களை இது மேலும் தனிமைப்படுத்தலாம். ஷாமிலா வேலையை மாற்றி, பணியிடத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. இந்த நடவடிக்கைகள் அவர் மீது சுமத்தப்பட்ட கொடுமையையும் இத்தகைய பாரபட்சமான நடைமுறைகள் தனிநபர்கள் மீது ஏற்படத்தக்கூடிய பாதிப்பையும் காட்டுகிறது. பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான தேவையை இது உணர்த்துகிறது. அத்துடன் மதிப்பு மற்றும் மரியாதையை உணரக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய, வரவேற்கத்தக்க சூழல்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் இது எடுத்துக் காட்டுகிறது.

## 7. புத்தளம் நகரில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

ஆடைக் கட்டுப்பாடு தொடர்பான 2019 அரசாங்க சுற்றறிக்கையைத் தொடர்ந்து, 2019, ஜுன் 19 ஆம் திகதி 16 வயதான கர்ப்பிணிப் பெண் /பயாசா (உண்மையான பெயர் அல்ல) முகத்தை மூடும் ஆடையை அணிந்ததற்காக புத்தளத்தில் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து 24 நாட்கள் பிணை வழங்கப்படாமல் நீர்கொழும்பில் சிறையில் அடைக்கப்பட்டார்.

கிளினிக்கிற்கு செல்வதற்கு முதல்நாள் முஸ்லிம் பெண்கள் முகத்தை மறைப்பதற்காக கைது செய்யப்படுவது குறித்து /பயாசா கேள்விப்பட்டிருக்கிறார். அடுத்தநாள், அவர்கள் கிளினிக்கிற்கு செல்லத் தயாரானபோது தான் கேட்டவற்றை கணவரிடம் தெரிவித்ததுடன் முகத்தை மறைக்கும் ஆடையை அணியத் தயங்கியுள்ளார். ஆனால் அவரது கணவர் முகத்தை மறைக்கும் ஆடையை அணிய வேண்டும் என கட்டாயப்படுத்தியதால் தயக்கம் இருந்தாலும் கணவனது கோரிக்கைக்கு இணங்கினார்.

சம்பவத்தை நினைவுகூர்ந்த அவர், கிளினிக்கிற்கு வருகை தந்தபோது இராணுவத்தினர் ஒருவர் அவர் முகத்திரையை விலக்குமாறு கேட்டதாகவும் /பயாசா கூறினார். அவர் அதற்கு இணங்கியதுடன் விரைவாக அதை அகற்றி கைப்பையில் வைத்துள்ளார். அதற்கு அவரது கணவர் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்பது ஆச்சரியமானது.

கிளினிக்கிலிருந்து வெளியேறிய பின்னர் /பயாசாவிற்கு தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக அவரும் அவரது கணவரும் புகைப்பட ஸ்டுடியோ ஒன்றுக்குச் சென்றுள்ளனர். துரதிர்ஷ்டவசமாக ஸ்டுடியோ புகை மூட்டமாக இருந்ததால் அவருக்கு மூச்சு விடச் சிரமமாக இருந்ததுடன் வாந்தியும் ஏற்பட்டது. தனக்கு ஏற்பட்ட அசௌகரியத்தைக் குறைப்பதற்காக கைக்குட்டையைப் பயன்படுத்தி மூக்கை மூடியுள்ளார். எனினும் ஸ்டுடியோவில் இருந்த ஒருவர் இதனை காவல்நிலையத்திற்கு அறிவித்துள்ளார். அவர் புகைப்படத்தை எடுத்து முடிப்பதற்கு முன்னதாக அங்குவந்த காவல்துறையினர் அவரைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தனர்.

அவளுக்குத் தயக்கம் இருந்தபோதும் முகத்தை மூடுமாறு கணவர் வற்புறுத்தியது பால்நிலை சமத்துவமின்மையையும் பல சமூகங்களில் பெண்கள் கட்டுப்படுத்தப்படுவதையும் வெளிப்படுத்துகிறது. அவருக்கு 16 வயது என்பதுடன் கர்ப்பமாக இருந்தாள். உடல் மீதும் விரும்பிய ஆடையை அணிவதற்கும் அவளிடம் உரிமை எதுவுமில்லை. தங்கள் சொந்த நம்பிக்கைகள், ஆசைகள் அல்லது பாதுகாப்புடன் இது முரண்பட்டாலும் பெண்கள் பெரும்பாலும் தங்கள் கணவர்களின் விருப்பங்களுக்கு இணங்க அழுத்தம் கொடுக்கப்படுகிறார்கள் அல்லது கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இந்த விடயத்தில், கணவனின் விருப்பத்தைத் திருப்திப்படுத்த /பயாசாவின் விருப்பத்தை தியாகம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவ்வாறு செய்ததற்காக அவர் கைது செய்யப்பட்டு 24 நாட்கள் சிறையில் இருக்க நேரிட்டது.

நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும்போது பிணை வழங்கப்படாமல் நீண்ட நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டது இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக சட்டங்கள் எப்படி நீண்டகாலமாக துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதையும் பெண்ணின் உரிமைகள், உரிய நடைமுறை மற்றும் நியாயமான விசாரணையை எதிர்மறையாகப் பாதிக்க அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. தவறிழைத்ததற்கான எந்தவித ஆதாரமும் இல்லாமல் நீண்ட காலமாக அவர் தடுத்து வைக்கப்பட்டது அவர் நியாயமற்ற முறையில் இலக்கு வைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. கைக்குட்டையால் முகத்தை மூடியதற்காக எந்தவித ஆதாரமும் இல்லாமல் நிறைமாத கர்ப்பிணியான 16 வயது பெண்ணை தடுத்து வைத்திருக்கும் அமைப்பு எவ்வளவு பாரபட்சமானது அல்லது இரக்கமற்றது என்பதையும் காட்டுகிறது. அவரது வீட்டில் நாங்கள் அவரைச் சந்தித்தபோது அவர் விடுதலை செய்யப்பட்ட சில நாட்களில் மகன் பிறந்ததாகக் கூறினார். மேலும் தடுத்துவைக்கப்பட்டபோது அவரும் வயிற்றில் இருந்த மகனும் அனுபவித்த கொடுமைகள் மகனது நடத்தையில் வெளிப்படுவதாக அவர் குறிப்பிட்டார். தனது வழக்கில் தொடர்ந்து பணியாற்றி தனது வழக்கை ரத்துச் செய்ய வைத்த பெண் சட்டத்தரணிகள் மற்றும் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்திற்கு அவர் நன்றிகளைத் தெரிவித்தார். அவரது மகன் பிறந்த பின்னர் அவரது கணவர் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகவும் தற்போது அதே வீட்டில் அவருடன் வசித்து வருவதாகவும் /பயாசா தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் இலங்கையில் மத சுதந்திரம் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு மரியாதை அளிக்க வேண்டிய தேவை உள்ளது என்பதையும் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் அமைப்புசார் பாகுபாடுகளுக்கு அரசாங்கம் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தையும் காட்டுகிறது.

### 8. புத்தளம் வைத்தியசாலைகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

முஸ்லிம் பெண் நோயாளிகள் கடுமையாக நடத்தப்படுவதாகவும், அவர்களில் பலருக்கு மத ரீதியாக அணிய வேண்டிய தேவையுள்ள தலையை மறைக்கும்

துணியை அணிவதற்கான உரிமை மறுக்கப்படுவதாகவும் உள்ளூர் பெண்கள் அமைப்புகளுக்கு நம்பகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மேலும் ஹிஜாப் அல்லது தலையை மறைக்கும் துணியை அணிவதற்காக வைத்தியசாலை பணியாளர்கள் முஸ்லிம் பெண்களைத் திட்டுகின்றனர். இது அவமரியாதைக்குரிய செயல் மட்டுமன்றி மனித உரிமைகளை மீறும் செயலாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் ஹிஜாப் மற்றும் அபாயா அணியும் பெண்களின் தலையை மறைக்கும் துணி பாதுகாப்பு காரணங்களுக்காக அகற்றப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்குச் செல்வதைத் தவிர்ப்பது மற்றும் தனியார் வைத்தியர்களிடம் மருத்துவம் பார்ப்பது அல்லது பழைய மருந்துச்சீட்டிலுள்ள மருந்துகளை வாங்கிப் பயன்படுத்துவதாக பெண்கள் கூறுகின்றனர். கர்ப்பிணிப் பெண்கள் நெஞ்சை மூடுவதற்கு துப்பட்டாவைப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை எனவும் நோயாளியின் படுக்கைக்கு வைத்தியர் வருவதற்கு முன்னதாக தாதியர்கள் பலவந்தமாக அதை அகற்றுவதாகவும் தெரிவிக்கின்றனர். பிரசவ அறையில் தனது கால்களை இறுக்கமாகக் பிடித்திருந்த தாதியை தள்ளிவிட்டதற்காக அவர் எவ்வாறு மோசமாக நடத்தப்பட்டார் என்ற கதையை ஒரு இளம் தாய் தெரிவித்தார். தாதி அவரது தொடையைக் கிள்ளியதுடன் வலியைப் பொறுக்க முடியாவிட்டால் ஏன் முஸ்லிம் பெண்கள் ஒன்றன்பின் ஒன்றாக பிள்ளை பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் எனக் கேட்டதாகவும் கூறினார். பிள்ளை பெற்றுக்கொண்ட தாய்மார்கள் மாதாந்தம் கிளினிக்கிற்கு குடும்ப நல உத்தியோகத்தர்களைச் சந்திக்க வரும்போது அவர்களுக்கு சௌகரியமான ஆடையை அணிவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் அபாயாவை அணிய விரும்பினால் அவர்களைத் திட்டி கழட்டுமாறு கூறுகின்றனர். பரிசோதனைகளைச் செய்வதற்கு தங்களுக்கு இலகுவாக இருக்கும் வேண்டும் எனக் கூறி குடும்ப நல உத்தியோகத்தர்கள் இதற்கு நியாயம் கூறுகின்றனர். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் இந்தத் தேவை இருக்கவில்லை.

சில வைத்தியசாலைகளில் சுகாதாரக் காரணங்களுக்காக நோயாளிகளின் தலையை மூடுதல் உட்பட ஆடைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் உள்ளன என்பதை அங்கீகரிக்க வேண்டியது அவசியம். வைத்தியசாலையில் அதிகபட்ச சுகாதாரத்தைப் பராமரிக்க வேண்டியது அவசியம் என்னும் போதிலும், இந்தக் கொள்கைகள் ஏதேனும் குறிப்பிட்ட மத அல்லது கலாச்சாரக் குழுக்களுக்கு பாகுபாட்டைக் காட்டுவதாக அமையக்கூடாது. இது அரசாங்க கட்டமைப்புகளில் வேரூன்றியிருக்கும் இனவெறியையும் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையைப் பின்பற்றும் நபர்களை சுகாதார அமைப்பு கூட தண்டிக்க முடிகிறது என்பதையும் குறிக்கிறது.

### 9. புத்தளம் பாடசாலைகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த சில பெற்றோர் தமது பிள்ளைகள் ஹிஜாப் அல்லது ஜீன்ஸ் அணிந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவோ சிங்களம் அல்லது தமிழ் பிரதேசங்களில் உள்ள பாடசாலைக்குள் நுழைவதற்கோ வாய்ப்பு மறுக்கப்பட்டு மனவேதனைக்குள்ளாக்கிய அவல அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து

கொண்டார்கள். இந்த விடயத்தில் ஒவ்வொரு பாடசாலையின் கொள்கைகளும் மாறுபடுகின்றன. காதுகள் வெளியே தெரியுமாறு ஹிஜாப் அணிய என சில பாடசாலைகள் அனுமதித்துள்ளன.

மாணவர்களின் எதிர்காலம் மற்றும் தொழில் வாழ்க்கையில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் உயர்தரப் பரீட்சைகளில் மோசடி நடைபெறுவதைத் தடுப்பதற்காகவே பரீட்சை மண்டபத்தில் தலையை மூடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனக் காரணம் கூறப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னதாக தலை மற்றும் கால்களை மறைக்கும் ஆடைகள் அனுமதிக்கப்பட்டன. எனினும் அதன்பிறகு இவ்வாறான ஆடைகளுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் மாணவர்களிடம் தொடர்ச்சியான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மத ரீதியான ஆடையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான பாகுபாடு காட்டப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து மாணவர்களுக்கும் சம உரிமை வழங்குவதை உறுதிப்படுத்த இதற்கு தீர்வு காண வேண்டும். உயர்தரப் பரீட்சையின் முதல் நாளின்போது தனது ஹிஜாபைக் கழட்டுமாறு கேட்கப்பட்டதாக ரிசானா குறிப்பிட்டார். பொது இடத்தில் மேற்பார்வையாளரால் அவமானப்படுத்தப்பட்டது தன்னை சங்கடப்படச் செய்ததாகக் கூறினார். அதன் பின்னரான பரீட்சைகளை அவர் எழுதவில்லை.

### 10. புத்தளம் - சோதனைச் சாவடிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

புத்தளத்தைச் சேர்ந்த பணியிலிருக்கும் பெண்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போது சோதனைச் சாவடிகளில் எதிர்கொள்ளும் பாரபட்சமான நடத்தை குறித்துக் கேள்விப்படும்போது மிகவும் கவலையளிக்கிறது. இராணுவத்தினர் குறிப்பாக முஸ்லிம் பெண்களை இலக்குவைத்து அவர்களை அவமானப்படுத்தும் வகையில் நடந்துகொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதுடன் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்.

இவ்வாறான நடத்தையினால் இந்தப் பெண்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கத்தை குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் மதத்தின் அடிப்படையில் மற்றவர்கள் முன்னிலையில் தனிமைப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்க உளவியல் துன்பத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தும். இது அவர்களின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் நீண்டகால எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். ஜூன் 2019ல் இளம் சட்டத்தரணி ஒருவர் கொழும்பிலிருந்து மன்னார் செல்லும்போது செட்டிக்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டார். அவருடைய தலையை மூடும் ஆடையை அகற்ற சிறிது நேரம் எடுத்ததால் பெண் இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் அவரது ஹிஜாப்பை வெட்டுவதற்கு கத்தரிக்கோலை எடுத்துள்ளார். அவர்கள் மற்றைய பெண்களின் ஹிஜாபை வெட்டுகிறார்கள் என அவர் எண்ணுவதுடன் சட்டத்தரணிகள் சங்க அட்டை இருந்ததால் அன்று அவர் காப்பாற்றப்பட்டார்.

முஸ்லிம் பெண்கள் குறிப்பாக முஸ்லிம் அல்லாதவர்களின் முன்னிலையில்

குறிவைக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுவது ஆபத்தானது என்பதுடன் அது முஸ்லிம் பெண்களின் உடல் கண்ணியத்தை அவமதிக்கிறது. இராணுவ அதிகாரிகள் பாதுகாப்பு என்னும் பெயரில் துணிகளை/ஹிஜாபை கிழிப்பது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும். எனினும் பெண்களின் உடல் கண்ணியத்தை மீறுவது பொதுவானதாக இருப்பதுடன் பெரும்பாலும் வடக்கில் இராணுவ சோதனைச் சாவடிகளில் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களிலும் கூட பெண்கள் தங்கள் உறவினர்களைச் சந்திக்க வரும்போது இவ்வாறான இழிவான நடைமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது சிறுபான்மை மதங்கள் மற்றும் இனத்தைச் சார்ந்த பெண்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவது மட்டுமன்றி சமூகத்தில் சகிப்புத்தன்மையின்மை மற்றும் பிளவையும் ஊக்குவிக்கிறது.

### 11. புத்தளம் வங்கிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு ஆண்டுகள் ஆன பின்னரும் கூட, அபாயா அணியும் முஸ்லிம் பெண்கள் மீது புத்தளத்திலுள்ள வங்கிகள் பாகுபாடு காட்டுகின்றன. துரதிர்ஷ்டவசமாக பல முஸ்லிம் பெண்கள் சமூக மற்றும் கலாச்சார தடைகள் காரணமாக கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் இல்லாது உள்ளனர். இதன் விளைவாக அவர்கள் வீட்டிலுள்ள ஆண்களைப் போன்று கல்வியறிவு பெற்றவர்களாக இல்லை. இது வங்கிகளுக்கான அணுகல் இல்லாத பிரச்சினையை மேலும் அதிகமாக்குகிறது. தேவையான கல்வியறிவு இருந்தபோதிலும் அவர்களின் ஆடை காரணமாக வங்கிக்கான அணுகல் தடுக்கப்படுவது இன்னும் மோசமானதாகும்.

முஸ்லிம் பெண்களுக்கு எதிரான இவ்வாறான பாகுபாடு ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இது ஆணாதிக்கத்தை வலுப்படுத்துவதுடன் ஆண்கள் மீது அவர்கள் தங்கியிருப்பதை மேலும் அதிகரிக்கிறது. அவர்களின் பாலினம் மற்றும் மத நம்பிக்கைகள் காரணமாக குடும்பங்களும் அரசாங்கமும் அவர்களை ஒதுக்கிவைக்கிறது. பாலினம், இனம், தேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவது கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அனைத்து தனிநபர்களும் சமமாகவும் கண்ணியத்துடனும் நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

### 12. கண்டி, அக்குரணையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

2023, ஏப்ரல் 21 அல்லது 22 ஆம் திகதி நடைபெறவுள்ள ஈகைத் திருநாளின் போது ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக அக்குரணை பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் கண்டி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அண்மையில் அக்குரணை பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டனர். தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு பள்ளிவாசல் நிர்வாகத்திடம் பொலிஸா ர் கேட்டுக்கொண்டதுடன் பாதுகாப்பு உதவியை வழங்குவதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

இந்தத் தகவலைப் பெற்றுக்கொண்ட பள்ளிவாசல் நிர்வாகத்தினர் அதை சமூகத்தினரிடம் பகிர்ந்துகொண்டனர். ஒவ்வொருவரும் வாட்ஸ்அப் குழுக்கள் மற்றும் முஸ்லிம் பெண்கள் அதிகமாகவுள்ள ஏனைய இடங்களில் செய்தியைப் பகிருமாறு கேட்டுக்கொண்டனர். இந்த நேரத்தில் முஸ்லிம் பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் குறிப்பாக வலியுறுத்தினார்கள். ஏனெனில் அவர்கள் மதத் தலைவர்கள் மற்றும் சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து அதிக சோதனைக்கு ஆளாக நேரிடும்.

பாதுகாப்பு நடவடிக்கையாக முஸ்லிம் பெண்கள் முழுமையான அபாயாக்கள்/ முகத்தை மறைக்கும் ஆடைகளை அணிய வேண்டாம் அல்லது ரமழான், ஈகை திருநாளின்போது பள்ளிவாசலுக்கு வர வேண்டாம் என பள்ளிவாசல் நிர்வாகம் அறிவித்திருந்தது. தாக்குதல்காரர்கள் அவ்வாறான ஆடைகளில் மறைந்திருப்பதற்கான சாத்தியம் உள்ளது என்பதால் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டது. தாக்குதல்காரர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம், அவர்களை அடையாளம் காண்பது சிரமம் என பொலிஸார் மேலும் எச்சரிக்கை விடுத்தனர்.

எதிர்வரும் ஈகைப் பண்டிகையின் போது சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸாரும் பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். சாத்தியமான பாதிப்புகளைத் தடுக்க விழிப்புடன் இருக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் அவர்கள் அனைவரது, குறிப்பாக முஸ்லிம் பெண்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளனர்.

ரமழான் அல்லது ஈகை திருநாள் காலங்களில் முழுமையான அபாயா/ முகத்தை மறைக்கும் ஆடையை அணிய வேண்டாம் அல்லது பள்ளிவாசலுக்குச் செல்லவேண்டாம் என முஸ்லிம் பெண்களுக்கு வழங்கப்படும் எச்சரிக்கை அறிவுரை மத சுதந்திரம் குறித்த கவலையை எழுப்புகிறது. வன்முறை பயம் காரணமாக முஸ்லிம் பெண்களின் ஆடைகள் மற்றும் அவர்களின் நம்பிக்கையைப் பின்பற்றும் திறன் ஆகியவை கட்டுப்படுத்தப்படலாம் அல்லது குறைக்கப்படலாம் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இது முஸ்லிம் பெண்கள் அவர்களின் சொந்த மத சமூகத்தில் இருந்து ஒதுக்கிவைக்கப்படுவதற்கு வழிவகுக்கும். இது மத சுதந்திரம் மற்றும் சமத்துவக் கொள்கைகளுக்கு எதிரானது ஆகும்.

இரண்டாவதாக, ஈகை திருநாளின்போது முஸ்லிம் பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என வலியுறுத்துவது ஆண்களை விட பெண்களே அதிக பாதுகாப்பு அபாயங்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது. இந்தப் பால்நிலை அம்சம் பெரும்பாலும் இஸ்லாமா/போபியா மற்றும் வெறுப்பு குற்றங்களின் பாதிப்புகளை முஸ்லிம் பெண்களே சுமக்கிறார்கள் என்ற உண்மையைக் காட்டுகிறது. இது அவர்களின் நம்பிக்கையை எந்தவித பயமுமின்றி பின்பற்றுவதற்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது. பாதுகாப்பு கவலைகளை நிவர்த்தி செய்வதிலும், முஸ்லிம் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதிலும் பால்நிலை உணர்திறனைக் கொண்ட அணுகுமுறைகள் தேவை என்பதை இது மீண்டும் வலியுறுத்துகிறது.

மூன்றாவதாக, ஈகை திருநாள் காலத்தில் சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸாரும் பள்ளிவாசல் நிர்வாகமும் இணைந்து செயற்படுவது பால்நிலை சமத்துவம் மற்றும் மத சுதந்திரத்தை மேம்படுத்துவதை நோக்கிய வரவேற்கக்கூடிய படியாகும். எனினும் அத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் தனிநபர்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றுவதற்கும் அவர்களின் அடையாளத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்குமான உரிமைகளை மீறவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

## 13. நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் ஆடை

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான ஆடைகள் தொடர்பான விதிகளில் திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி விசேட அறிவித்தல் இல. 2325/44 மார்ச் 30, 2023 வெளியிடப்பட்டது. இந்தப் புதிய விதி இதற்கு முந்தைய ஆடைக் கட்டுப்பாடு அறிவித்தலை ரத்துச் செய்கிறது. இந்தப் புதிய விதி பெண் சட்டத்தரணிகளுக்கான ஆடைகளாக வெள்ளை, கறுப்பு, வெள்ளை போன்ற நிறங்கள், சாம்பல் அல்லது மெல்லிய ஊதா நிறுத்தினாலான சேலை மற்றும் பிளவுஸ், கறுப்பு நிற காற்சட்டை, வெள்ளை நிற பிளவுஸ், கறுப்பு நிற மேலங்கி மற்றும் காலணிகள் அல்லது கறுப்பு நிற பாவாடை, வெள்ளை நிற பிளவுஸ், கறுப்பு மேலங்கி மற்றும் காலணிகள் ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடுகிறது. இந்தப் புதிய விதி பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் முழுங்காலுக்கு கீழே கறுப்பு நிற கவுன்களையோ சட்டைகளையோ அணிவதற்கு அனுமதிக்காது. இந்த ஆடைக் கட்டுப்பாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள திடீர் மாற்றம் முஸ்லிம் பெண் சட்டத்தரணிகள் தங்கள் நீண்ட கவுன் (பொதுவாக அபாயா எனப்படுகிறது) அணிவதைப் பாதிக்கிறது. அபாயா அணியக்கூடாது என்றும் சேலை அல்லது நீண்ட பிளவுஸ் மற்றும் காற்சட்டைகளை அணிய வேண்டும் என்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு முஸ்லிம் பெண் சட்டத்தரணிகளிடம் இருந்து ஏற்கனவே ஒரு பெண்கள் குழு முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது. சில இளம் சட்டத்தரணிகள் முழுவதுமாக உடலை மறைக்கும் வகையில் சேலை மற்றும் கழுத்தை மூடும் வகையிலான நீண்ட பிளவுஸை அணியத் தயாராக உள்ளனர். அவர்கள் ஹிஜாப் குறித்தே அதிக கவலை கொண்டுள்ளனர். எனினும் வர்த்தமானியின் பிரகாரம் அதை அணியலாம் என்பதால் ஆறுதல் அடைந்துள்ளனர்.

எனினும் இந்த வர்த்தமானி தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் முஸ்லிம் பெண்களின் மத அல்லது நம்பிக்கை சுதந்திரம் மீறப்படுவது மட்டுமன்றி நீதிமன்றப் பணிகளில் சுதந்திரமாக ஈடுபடுவதைத் தடுப்பதன் மூலம் அவர்களின் பணியை சுதந்திரமாக மேற்கொள்வதற்கான உரிமையையும் மீறலாம்.

ஏற்கனவே அபாயா அணியும் முஸ்லிம் பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை இந்தப் புதிய விதி பாதிக்கலாம் என பேட்டியளித்த பலரும் எண்ணுகின்றனர். இந்த வர்த்தமானி வெளியிடப்படுவதற்கு முன்னர் இருந்து நீதிமன்ற ஆடைக் கட்டுப்பாட்டில் பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் நீண்ட கவுன் எனும் வகையின் கீழ் அபாயா அணிய அனுமதிக்கப்பட்டனர். எனினும் புதிய வர்த்தமானியில் நீண்ட

கவுன் அகற்றப்பட்டதால், அபாயா அணிய அனுமதிக்கப்படாது. இது முஸ்லிம் பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்குப் பணியிடத்தில் பாதகமாக இருப்பதுடன் பெண்களுக்கு நீதிமன்ற வளாகத்தில் வேறு வடிவத்தில் பணியிட துன்புறுத்தல்களுக்கு தூண்டலாம். நீதிமன்றத்திற்கு தேவையான விதிகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்யும் அதேவேளை, ஆடைகள் தொடர்பான எந்தவொரு கட்டுப்பாடுகளும் அல்லது விதிகளும் பாகுபாடு இல்லாத மற்றும் பால்நிலை சமத்துவக் கொள்கைகளை மீறுவதில்லை என்பதை உறுதிப்படுத்துவது அவசியம். இந்தப் புதிய விதிகள் குறிப்பிட்ட பெண்கள் குழுவிற்கு, குறிப்பாக நீதித்துறையில் நியாயமற்றதாகத் தோன்றலாம். அத்துடன் அரசியலமைப்பு உரிமைகளை (உறுப்புரைகள் 10 மற்றும் 12) மீறுவதுடன் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது நீதியை நாடுவதற்கு ஏனைய பெண்களை இது யோசிக்கவும் வைக்கலாம்.

### 14. *MMDA* சீர்திருத்தம் குறித்த சர்ச்சை

மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தை மீறும் பால்நிலை வன்முறை என்பது புதிதல்ல. இந்தப் போக்கு இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்களை சட்டரீதியான வழிகளிலும் கூட நீண்ட காலமாகப் பாதித்துள்ளது. முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (*MMDA*) 1770 படேவியன் சட்டத்திலிருந்து தழுவப்பட்டுள்ளது. இதில் பாலின பாகுபாட்டுக்கான சில விதிகள் காணப்படுவதுடன் இலங்கையின் *CEDAW* கடமைப்பாடுகளுக்கு எதிராகவும் உள்ளது. இந்தச் சட்டத்தை சீர்திருத்த வேண்டும் என 1954ல் அழைப்பு விடுக்கப்பட்டபோதும், அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் இதுவரை இந்தச் சட்டம் சீர்திருத்தப்படவில்லை.

முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்ட நடைமுறை பழக்கவழங்கங்கள் பலவற்றை ஒருங்கிணைத்து 1951ல் இலங்கை பாராளுமன்றத்தால் *MMDA* இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் வழக்கமான நீதிமன்ற அமைப்பு மூலமாக அன்றி, குவாசி எனப்படும் தனிநபரால் நிர்வகிக்கப்படும் பதவியின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த உடனேயே, முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஓரங்கப்பட்டப்படுவதும், பாகுபாடு காட்டப்படுவதும், ஒடுக்கப்படுவதும் உணரப்பட்டது. மறுபுறம் ஆண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்குத் தெரியாமல் செய்யும் சில செயல்களைச் சட்டபூர்வமாக்குவதற்கும், அவர்களைக் கைவிடுவதற்கும் தவறாக நடத்துவதற்கும், திருமணங்களைப் பதிவு செய்யாமல் அதன் மூலம் எந்த நிபந்தனைகளுமின்றி 4க்கும் மேற்பட்ட பலதாரத் திருமணங்களைச் செய்யவும், குழந்தைகளுக்கு ஜீவனாம்சத் தொகையை வழங்காமல் இருக்கவும், குழந்தைத் திருமணத்தில் ஈடுபடவும், பலவந்தத் திருமணம் மற்றும் பதின்ம வயது கர்ப்பம் ஆகியவற்றுக்கும், பெண்களை குவாசி நீதிபதிகள், பதிவாளர்கள் மற்றும் ஜூரிகளாக அனுமதிக்காமல் இருக்கவும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள்.[17] தற்போதுள்ள *MMDA* இன் பிரகாரம் 12 வயதுக்குட்பட்ட எவருக்கும் குவாசியின் ஒப்புதலுடன்

17 Sunday Observer, Ameer Faiz, 'MMDA: Who is blocking reform of this discriminatory law?', 12th August 2018, https://www.sundayobserver.lk/2018/08/18/issues/mmda-who-blocking-reform-discriminatory-law

திருமணம் செய்து வைக்கலாம். இதன் அர்த்தம் என்னவென்றால் இலங்கையில் முஸ்லிம் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது பூஜ்ஜியமாகும். இந்தப் பின்னணியில் 1980களில் இருந்து இந்தச் சட்டத்தைத் தீர்திருத்த வேண்டும் என முஸ்லிம் பெண்கள் வாதிடத் தொடங்கினர்.

சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டு 1970 ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளை ஆராயவும் சீர்திருத்தங்களை முன்மொழியவும் ஆறு வெவ்வேறு குழுக்களை அமைத்துள்ளது. இந்தக் குழுக்களின் கண்டுபிடிப்புகள், பெண்கள் குழுக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் தற்போதைய நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ சீர்திருத்தத்தை இறுதிசெய்தார். அதில் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை 18 ஆக நிர்ணயித்தல், திருமணத்தைக் கட்டாயமாகப் பதிவு செய்தல், திருமணப் பத்திரத்தில் பெண்ணின் சம்மதமும் கையொப்பமும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான விவாகரத்து விதிகள், பலதார திருமணத்தை இல்லாது செய்தல், குவாசி அமைப்பை மாவட்ட நீதிமன்ற அமைப்பில் சமரசம் செய்பவராக மேம்படுத்துதல் போன்ற திருத்தங்கள் இதில் முன்மொழியப்பட்டன. இந்தச் சீர்திருத்தங்கள் அனைத்தும் பல தசாப்தங்களாக முஸ்லிம் பெண்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு இணங்கவே உள்ளன.

சீர்திருத்தப்படாத *MMDA* மற்றும் குவாசி அமைப்பு மூலம் முஸ்லிம் பெண்கள் மீதான தொடர்ச்சியான அடக்குமுறை முஸ்லிம் சமூகத்தில் வேரூன்றிய ஆணாதிக்க நிலைப்பாட்டின் வெளிப்பாடாகும். தற்போது பாராளுமன்றத்தில் உள்ள 18 முஸ்லிம் ஆண் உறுப்பினர்கள் முஸ்லிம் ஆண் தலைமைத்துவ அகில இலங்கை ஜமயத்துல் உலமாவின் உதவியுடன் முன்மொழியப்பட்டுள்ள *MMDA* சீர்திருத்தத்தை முறியடிப்பதில் உறுதியாக உள்ளனர். இஸ்லாம் விதித்தபடி பெண்களை சமமாக நடத்த மறுப்பது மத போதனைகளை விட கலாச்சார தாக்கங்களில் இருந்து வருகிறது. பெண்கள் அதிகாரம் பெற்றுவிட்டால் என்ன ஆகும் என்ற தங்களின் சொந்த பாதுகாப்பின்மையே இதற்குக் காரணம் ஆகும்.

*MMDA*யின் பாலின பாரபட்சமான விதிகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்கள் மற்றும் அதன் சீர்திருத்தங்களுக்காக அழைப்பு விடுக்கும் முஸ்லிம் பெண்கள் நீண்ட காலமாக சமூகத்தால் துன்புறுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளனர். சமீப காலங்களில் களத்தில் இறங்கி பணியாற்றும் மற்றும் ஆன்லைனில் செயற்படும் செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்துடன் சீர்திருத்த செயற்பாட்டில் ஈடுபட்டதற்காக கடுமையான தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். புத்தளம் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் ஸ்தாபகரான ஜுவைரியா மொஹிதீன் சமூகத்தால் குறிப்பாக உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் புத்தளம் பெரிய பள்ளிவாசலுடன் தொடர்புடைய நபர்களின் அச்சுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் ஆளாக நேரிட்டது. பாராளுமன்றத்தில் *MMDA* சீர்திருத்தத்தை சமர்ப்பிப்பது தொடர்பில் 2022 நொவம்பர் 23 ஆம் திகதி நீதி அமைச்சரைச் சந்திக்கச் சென்ற பெண்கள் குழுவைப் பற்றி 2023 ஜனவரி, 10 ஆம் திகதி மாலை தொழுகைக்குப் பின்னர் புத்தளம் நகரிலுள்ள பள்ளிவாசல் ஒரு அறிவிப்பை வெளியிட்டது. இது இஸ்லாத்திற்கு எதிரான செயல் எனக் கண்டித்ததுடன் இது வெளிநாட்டு

சக்திகளால் (*NGO*கள்) இயக்கப்படுவதாகத் தெரிவித்தனர். 2023 ஜனவரி 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர் ஆண்களைத் திரட்டி போராட்டத்தில் ஈடுபட்டதுடன் அதில் முஸ்லிம் பெண் உரிமைகளுக்காகப் போராடும் செயற்பாட்டாளர்கள் அவமதிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜுவைரியாவையும் அவரது நிறுவனத்தையும் இலக்கு வைத்து சுவரொட்டிகள் மற்றும் சமூக ஊடகங்களில் பிரச்சாரங்களை முன்னெடுத்தனர். முஸ்லிம் பெண்கள் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களின் கோரிக்கைக்கு எதிராக நீதி அமைச்சரிடம் கையளிக்கும் நோக்கில் கையெழுத்துப் பிரச்சாரத்தையும் புத்தளம் பள்ளிவாசல்கள் தொடங்கின. *MMDA*யை சீர்திருத்துவதற்காகப் பணியாற்றும் வெளிநாட்டு சக்திகளை மறைமுகமாகக் கண்டித்தும் /பேஸ்புக்குகளில் பதிவுகள் மற்றும் மீம்கள் பகிரப்பட்டன. வேறு இடங்களில் நீதி அமைச்சருடனான சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் அவர்களில் ஒரு சிலர் உடல் ரீதியான தாக்குதல்களுக்குப் பயந்து தற்காலிகமாக தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற வேண்டியும் ஏற்பட்டது.

நொவம்பர் 15, 2022 அன்று சமூக ஊடகத்தில் அவதூறான வீடியோ ஒன்று வெளியிடப்பட்டது. *MMDA* சீர்திருத்தங்களுக்காகப் பணியாற்றிய செயற்பாட்டாளர்கள் பலரையும் அவமதிக்கும் நோக்கில் இந்த வீடியோ இருந்தது. இந்த வீடியோ முஸ்லிம் சமூகத்தில் உள்ளவர்களால் உருவாக்கப்பட்டது. அந்த வீடியோவில் இடம்பெற்ற பெண்களில் சிஸ்டர்ஹுட் இனிசியேட்டிவ்வின் ஸ்தாபகர் நபீலா இக்பாலும் ஒருவர். அவருடைய பணியும் அவரது நிறுவனத்தின் பணியும் சமூக ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதால் இந்த அவதூறான வீடியோ அவரை தனிப்பட்ட ரீதியிலும் தொழில் ரீதியிலும் மிகவும் பாதித்தது. அவரைப் போன்று பல முஸ்லிம் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் பல ஆண்டுகளாக முஸ்லிம் சமூகத்திற்குள்ளேயே துன்புறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர். முஸ்லிம் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடும் முஸ்லிம் பெண்கள் கடினமான இடத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். அத்துடன் முஸ்லிம் சமூகத்திற்கு வெளியேயுள்ள இனவாதிகளிடமும் முஸ்லிம் சமூகத்திற்குள் உள்ள பெண் வெறுப்பாளர்களிடமும் தொடர்ந்தும் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். கட்டாயத் திருமணங்கள், *MMDA* சீர்திருத்தங்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பில் அவர் பணியாற்றும் போது அவர் உண்மையான முஸ்லிம் இல்லை எனவும் அவருடைய மத நம்பிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன என நபீலா குறிப்பிடுகிறார். ஆனால் அரசாங்கம் அல்லது பிற குழுக்களால் உரிமை மீறல்கள் முன்னெடுக்கப்படும்போது முஸ்லிம் சமூகத்திற்காகப் பேசுமாறு அதே நபர்களே அவரை அணுகுகிறார்கள்.

இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதுடன் அதை அவர்கள் தீவிரமாகப் பயன்படுத்துகின்றனர். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்களை இலக்கு வைத்து வெறுப்பூட்டும் பேச்சுக்கள் மற்றும் துன்புறுத்தல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. தங்கள் கருத்துக்களை தைரியமாக வெளியிடுவதுடன் சமூக சேவைகளில் ஈடுபடும் இந்தப் பெண்கள் தங்கள் சொந்த

சமூகத்தில் இருந்தே ஆன்லைல் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது.

பெண் அரசியல்வாதியான (உள்ளூராட்சி அதிகாரசபை) திருமதி. பிஸ்லியா பூட்டோ பெண் உரிமை செயற்பாடுகளில் பங்கேற்றமைக்காக முஸ்லிம் சமூகத்திடமிருந்து விமர்சனங்களையும் கண்டனங்களையும் எதிர்கொண்டார். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக அவர் நடப்பதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. மேலும் சமூக ஊடகங்களில் தங்கள் முகங்களைக் காட்டுவதற்காகவோ சமூக செயற்பாடுகளில் பங்கேற்பதற்காகவோ பெண்கள் ஆன்லைனில் அவமானப்படுத்தப்படும் இதேபோன்ற பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களில் சுவரொட்டிகள்/பேனர்கள்/புத்தகங்களில் முஸ்லிம் பெண்களின் முகங்கள் தெரியாதவாறு மங்கலாக்கப்பட வேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும் என முஸ்லிம் ஆண்கள் விரும்புவதை பல பெண் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் அண்மைக் காலங்களில் கவனித்துள்ளனர். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முஸ்லிம் சமூகத்திலுள்ள இளைஞர்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது. இதன்மூலம் கருத்து சுதந்திரம் மற்றும் பாலின சமத்துவத்தை ஏற்றுக்கொள்ள உதவுகிறது. சிறுமிகள்/பெண்கள் ஆன்லைன் கலந்துரையாடல்களில் பங்கேற்கவும் பல்வேறு ஆன்லைன் செயற்பாடுகளில் கலந்துகொள்ளவும் ஊக்கப்படுத்துவது அவசியம் என இந்த செயற்பாட்டாளர்கள் வாதிடுகின்றனர். நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களுக்கான உரிமையை ஊக்குவிப்பது மற்றும் பாதுகாப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்தில் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மரியாதைக்குரிய ஆன்லைன் சூழலை வளர்ப்பது சாத்தியமாகும்.

சமூக ஊடகங்களில் *MMDA* சீர்திருத்தங்கள் தொடர்பான உரையாடல்களில் கூட முஸ்லிம் பெண்கள் ட்ரோல் செய்யப்படுவதுடன் அவமானப்படுத்தப்படுகிறார்கள். மே 2023ல் ஷம்லா நலீர் தனது நிக்கா (திருமண) சான்றிதழில்[18] கையொப்பமிடும் புகைப்படத்தை ட்விட்டரில்[19] வெளியிட்டார். அவருக்குப் பல வாழ்த்துச் செய்திகள் வந்தபோதும் அவரது திருமணம் விவாகரத்தில் முடியவேண்டும் என்பது போன்ற வாழ்த்துக்களுடன் பலர் அவரைத் தாக்கி விமர்சனம் செய்தனர்.

18 Under MMDA 1951 a woman cannot sign her marriage certificate. She must be given in by her guardian (Wali) to the bridegroom thus there is no place for the bride to sign in the Muslim marriage certificate.

19 Twitter, Batapola Antenna, 23rd May 2023, https://twitter.com/97shamster/status/1661037121774448640?s=20

# ஊ. முடிவு மற்றும் பரிந்துரைகள்

இந்த ஆராய்ச்சிக்காக நேர்காணல் செய்யப்பட்ட பல பெண் உரிமை செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்டவர்களும், தங்கள் சமூகத்தில் ஆண்கள் மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, பெண்களின் புனிதம் மற்றும் இனப்பெருக்க அமைப்பைப் பேணுவது உட்பட காலங்காலமாக சமூகத்தில் காணப்படும் பெண்கள் மீதான எதிர்பார்ப்புகளுக்கும் விதிமுறைகளுக்கும் பெண்களை இணங்கச் செய்கிறார்கள் எனக் கருதுகின்றனர். பெண்களை ஒருவருக்கு ஒருவர் திசை திருப்புவதன் மூலம் மத வெறுப்பு மற்றும் பிரிவினையைத் தூண்டுகிறார்கள். இதனால் பெண்களே மேலும் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் போக்குகள் சமூகத்தில் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதுடன் தீங்கு விளைவிக்கும். மாறாக, அவர்கள் மத ரீதியான பழக்கவழக்கங்களில் அனைவரையும் உள்ளடக்கிய, பகுத்தறிவு அணுகுமுறைக்காக வாதிடுகின்றனர். இது தனிநபர் சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மைக்கான மரியாதை மற்றும் மிக முக்கியமாக சகவாழ்வு மற்றும் சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கிறது.

முஸ்லிம் பெண் உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிரான இந்த விமர்சனங்கள் பெரும்பாலும் தவறாக வழிநடத்தப்படுவதுடன், பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை கைவிடுமாறு பெண்களை இழிவுபடுத்த அல்லது அழுத்தம் கொடுக்க விரும்பும் ஒரு புள்ளியில் இருந்து எழுகின்றன. இருப்பினும், பெண்களின் பிரச்சினைகள் பெருந்தொற்றுக் காலத்தில், பொருளாதார அல்லது அரசியல் நெருக்கடியின் போது என ஒவ்வொரு நாளுமே காணப்படுகின்றன. முஸ்லிம் சமூகத்தில் உள்ள அதே பெண் உரிமை செயற்பாட்டாளர்கள் தான் சமூகப் போராட்டங்களுக்கும் அடிக்கடி அணிதிரள்கிறார்கள். இந்த தியாகங்கள் பொதுவாக சமூக உறுப்பினர்களால் கவனிக்கப்படுவதில்லை. அதேபோல், பல முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்கள் சமூகங்களின் விருப்பங்கள் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப முஸ்லிம்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர், சில சமயங்களில் புறக்கணிக்கப்படுகின்றனர்.

மேலே விவாதிக்கப்பட்ட பல விடயங்கள், பாதுகாப்பு மற்றும் பிற அடிப்படைச் சுதந்திரங்களின் அனுபவங்களை வடிவமைப்பதில் பால்நிலை மற்றும் மதம் எவ்வாறு குறுக்கிடுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன (சுதந்திரமாக நடமாடுதல், குழுக்களை உருவாக்குதல், ஒன்றுகூடுதல் மற்றும் கொடூரமாக, இழிவாக நடத்தப்படாமை). முஸ்லிம் பெண்கள் உட்பட அனைத்து தனிநபர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பாதுகாக்கப்படுவதையும், மேம்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்த, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாலின வித்தியாசங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய அணுகுமுறைகளின் அவசியத்தை இவை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அரசாங்கத்தின் செயல்பாடு அல்லது வேண்டுமென்றே செயல்படாததுதான் இந்த அடிப்படை உரிமை மீறல்கள் அதிகரிக்க அனுமதிக்கிறது. அதன்பிரகாரம், நாங்கள் பின்வரும் பரிந்துரைகளை வழங்குகிறோம்.

**இலங்கை அரசாங்கத்திற்கான பரிந்துரைகள்:**

1. *CEDAW*யின் தேசிய அமைப்பின் மேற்பார்வையுடன் *CEDAW*யின் கடமைகள் கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

2. பெண்கள் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள், களமட்ட அமைப்புகள், பாகுபாட்டால் பாதிக்கப்படும் பெண்கள், பெண் அரசியல் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் கொள்கை மட்ட உரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

3. பெண்களுக்கான சமத்துவத்தை மேம்படுத்த கொள்கை மட்ட மாற்றங்கள் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

4. பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளைக் குறைக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். முன்மொழியப்பட்ட சட்டங்களின் பாலின அடிப்படையிலான தாக்கங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

5. *PTA* ரத்து செய்யப்பட வேண்டும், அத்துடன் சிறுபான்மையினர் மீது பாரபட்சம் காட்ட *PTA* மற்றும் *ICCPR* ஆகிய சட்டங்களைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். கைதுகள் மற்றும் பிணை தீர்மானங்கள் பாலினத்தைக் கவனத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

6. முஸ்லிம் பெண்களை அவர்கள் ஆடைகளின் அடிப்படையில் வைத்தியசாலைகள், பாடசாலைகள், நீதிமன்றங்கள், வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் பாரபட்சம் காட்டுவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

7. சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக தவறான தகவல்கள் மற்றும் வன்முறைகளைத் தூண்டும் வெறுப்பு பேச்சுகளுக்கு (குறிப்பாக பாலினம் சார்ந்த வெறுப்பு பேச்சு) எதிராக போராடுவதுடன் வழக்கு தொடர வேண்டும்.

8. ஏனைய இலங்கைப் பெண்களுக்கு சமமாக முஸ்லிம் பெண்களும் சட்டத்தின் கீழ் நடத்தப்படுவதை உறுதிப்படுத்தவும் குழந்தை திருமணம், பதின்ம வயது கர்ப்பம் மற்றும் கட்டாயத் திருமணம் ஆகியவற்றிலிருந்து முஸ்லிம் குழந்தைகள் பாதுகாக்கப்படுவதையும் உறுதிப்படுத்தவும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்கு இணையாக *MMDA* உடனடியாக சீர்திருத்தப்பட வேண்டும்.

9. விவாகம் (பொது) பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு இலங்கை முஸ்லிம்கள் திருமணம் செய்துகொள்வதைத் தடுக்கும் உறுப்புரையை அரசாங்கம் உடனடியாக நீக்க வேண்டும்.

10. பெண்கள் மற்றும் சிறுமிகளின் அடிப்படை உரிமைகளை மீறும் அனைத்து

சம்பிரதாய மற்றும் மதப் பழக்கவழக்கங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பெண் உறுப்பைச் சிதைக்கும் நடவடிக்கை குற்றமாக அறிவிக்கப்பட வேண்டும். முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் வழக்குகளை வழக்கமான நீதிமன்ற அமைப்பிலிருந்து விலக்கிவைப்பதன் மூலம் நீதிக்கான அணுகலில் பாரபட்சம் காட்டக்கூடாது.

**சர்வதேச சமூகத்திற்கான பரிந்துரைகள்:**

1. அதிகரித்துவரும் இஸ்லாமா/போபியாவைப் புறந்தள்ளுவதுடன் சிறுபான்மை சமூகங்களை மேலும் துன்புறுத்தும் தேவையற்ற பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்புகளை ஊக்குவிக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அரசாங்கம் பயன்படுத்துவதை நிராகரிக்க வேண்டும். *PTA* சட்டத்தை ரத்துச் செய்ய கோரவும், முன்மொழியப்பட்ட *ATA* சட்டத்தை நிராகரிக்கவும், 2007 ஆம் ஆண்டின் *ICCPR* சட்டத்தை சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதைக் கண்டிக்கவும் வேண்டும்.

2. அதேவேளை, இஸ்லாமா/போபியாவை எதிர்த்துப் போரிடுவது என்பது பெண் உரிமைகளை விட்டுக்கொடுப்பதல்ல என்பதை அங்கீகரிக்கவும். *MMDA* சட்டத்தை சீர்திருத்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடிவரும் முஸ்லிம் பெண் உரிமைகள் செயற்பாட்டாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ஆதரவு அளிக்க வேண்டும்.

3. *CEDAW* மற்றும் ஏனைய மனித உரிமைகள் சட்டங்களின் கீழான கடமைப்பாடுகளை மதித்து அவற்றைச் செயல்படுத்த இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கவும்.

# குறிப்புகள்:

/புல்லர், எல்., ரூ ரிஸ்வி, ஆர். (2019, ஜுன் 16). உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து முஸ்லிம்கள் தன்னிச்சையான கைதுகளால் குறிவைக்கப்பட்டனர். மனித உரிமைகள்' அல்ஜசீரா. *https://www.aljazeera.com/features/2019/6/16/muslims-targeted-with-arbitrary-arrests-after-easter-massacre*
என்னும் இணைப்பிலிருந்து ஏப்ரல் 26, 2023 பெறப்பட்டது.

மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் பற்றிய இரகசிய அறிக்கை, 2023

சரூர், ஆசிரியர்: *S. A.* (2022, பெப்ரவரி 19). பயங்கரவாத தடுப்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள். கொழும்பு டெலிகிராப். *https://www.colombotelegraph.com/index.php/women-victims-of-the-prevention-of-terrorism-act* என்னும் இணைப்பிலிருந்து மே 1, 2023 பெறப்பட்டது.

#MINORMATTERS